REGISTERED No. M. 6165. க. லை. 13

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை.

## ஆகஸ்டு—1961.

| விஷயம். | பக்கம், |
| --- | --- |
| முஸ்லிம்களுக்குத் தன்னம்பிக்கை வேண்டும் ... | 1 |
| மனிதனின் அதிசய குணங்கள் (M. A. முஹம்மது ஷரீப்) ... ... | 9 |
| அழகு ராணி—ஹுஸ்ன் ஆரா (சிறுவர் பகுதி) டி. எப். ரஹ்மத்துல்லா-மஆலி ஸாஹிப் (பாகவி) | 15 |
| ஷோபா தேவி (தொடர் கதை) (ஏ. ஆர். கமால்) | 21 |
| திருக் குர்ஆன் சார சங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) | 25 |
| ஹஜ்ரத் க்வாஜா மூஈனுத்தின் ஜீவிய சரிதை (டி. எப். ஆர். மஆலி ஸாஹிப் பாகவி) ... ... | 29 |

...இஸ்லாம் ஆபீஸ் :
...ரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

3L
Q7m24, M24 SI
N61,
187085

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு
வருஷ சந்தா ரூ. 1–50
தனிப் பிரதி நயா பைஸா 0–13
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 2–00

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5


## மாநிலம் மறக்க முடியாத மாவீரர்

தற்போதிய நாகரீக உலகில் மின்சார விளக்கு, தந்தி சினிமா முதலியவைகள் இன்றியமையாதவைகளானவை. ஆல்வா எடிசன் என்னும் அமெரிக்கர் ஊக்கத்துடன் இரவும் பகலும் கஷ்டப்பட்டு பாடு பட்டதின் பயனாகவே நமக்கு மேற் கூறிய சௌகரியங்கள் தற்போது இலகுவில் கிடைக்கின்றன. அவருடைய சரித்திர சுருக்கம் அடங்கி யுள்ளது இப்புத்தகம். இதன் விலை நயா பைசா. 40

கிடைக்குமிடம்:—
ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

الاسلام

# பத்ஹுல் இஸ்லாம்

ஆகஸ்டு—1961.

## முஸ்லிம்களுக்குத் தன்னம்பிக்கை வேண்டும்

உலகில் தோன்றிய ஒவ்வொரு உயிரினமும் தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்ள வழிதேடிக் கொள்ளாமல் இருப்பதில்லை. எறும்பும் இரை தேடிப் பிழைத்துக்கொள்கிறது; யானையும் இரை தேடிப் பிழைத்துக் கொள்கிறது. மனிதனும் தான் தன் வயிற்றை நிரப்பிக்கொள்வதற்காக என்னென்னமோ மார்க்கங்களைக் கையாண்டுத் திரிந்து கொண்டிருக்கிறான். "எல்லாம் இந்த சாண் வயிற்றுக்குத்தான்" என்று சொல்லி, ஊரை ஏய்த்து, உலகை ஏய்த்துத்திரிந்து கொண்டிருக்கிறான் மாந்தன்.

ஆனால், நம் இஸ்லாமிய ஷரீஅத்தில் ஹலால் என்றும், ஹராம் என்றும் இரண்டு வழிகள் காட்டப்பட்டிருக்கின்றன. ஒரு வழி பின்பற்ற வேண்டியது; மற்றொன்று ஒதுக்கித் தள்ள வேண்டியது. அதாவது, முஸ்லிமாகிய ஒவ்வொருவரும் ஹலாலான வழியில் சம்பாதித்து உண்ண வேண்டும் என்றும், ஹராமான வழியில் செல்லாமல் ஒதுங்கி யிருந்து ஜீவனம் நடத்திப் பிழைக்க வேண்டுமென்றும் இஸ்லாம் மதம் வலியுறுத்துகின்றது.

உலகில் வாழ்வதற்கு மனிதர்கள் மீது பல கடமைகள் இருக்கின்றன. மனிதன் கடமை உணர்ந்து, தர்மம்—அதர்மம், அறிந்து நடந்து கொள்ள வேண்டியவனாக இருக்கின்றான். ஒரு மனிதன்—அதிலும் ஒரு முஸ்லிம் தன்னுடைய கடமை இன்னதென்று உணர்ந்து நடப்பதற்கு 'தன்னம்பிக்கை' என்னும் பொறுப்பு உணர்ச்சி வேண்டும்.

* * * *

'தன்னம்பிக்கை' என்பது என்ன? அல்லாஹுத் தஆலா, மனிதனுக்குச் சகல விதமான இலௌகிகத் தன்மைகளையும் அளித்துள்ளான். மனிதன் மனது வைத்தால் உலகத்தில் எந்தக் காரியத்தையும் சாதித்துக் கொள்கிறான்; இந்தச் சாதனையால் சில சமயம் வெற்றியும் பெறுகிறான்; சில சமயம் தோல்வியும் அடைகிறான். வெற்றி பெறும் போது, தன் சாமர்த்தியத்தை மெச்சிக் கொள்கிறான். தோல்வியடையும் போது, பிறர் மீது பழியைப் போட்டு தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறான்.

தன்னுடைய அறிவிலும், தன்னுடைய சாமர்த்தியத்திலும் தன்னுடைய உழைப்பிலும் எவனுக்குத் திடசித்தம், உறுதியான எண்ணம் இருக்குமோ அவனே, தன் காரியத்தை சுயமே சாதித்துக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தவன் என்று கருதப்படுகின்றான். இதையும் ஒரு வகையில் தன்னம்பிக்கை என்று சொல்லலாம்.

மனிதரில் தன்னம்பிக்கை யுடையோர் பலவகையில் இருக்கின்றனர். (1) ஒருவன் தன்னுடைய உழைப்பை மட்டும் நம்பிக் கொண்டு, இரவு பகல் என்று பாராமல் உழைத்துப் பாடுபட்டுப் பிழைப்புத் தேடிக்கொள்கிறான். (2) இன்னொருவன் உழைக்க மாட்டான். ஆனால் தன் அறிவைச் செலுத்திப் பிறரிடம் வேலை வாங்கி, அதனால் பெரும் ஊதியம் அடைந்து அதைக் கொண்டு சுகமாக காலந்தள்ளிக் கொண்டிருப்பான். (3) இன்னொருவன் உழைத்தும் சாப்பிடமாட்டான்; பிறர் உழைப்பையும் பயன்படுத்திக் கொள்ள மாட்டான். ஆனால், சோம்பேறியாய் இருந்து கொண்டு, யாரேனும் கொடுத்தால் வாங்கித் தின்பான்; யாரும் கொடுக்காவிட்டால் பிறரைக் குறை சொல்லித்திரிந்து கொண்டிருப்பான்.

* * *

ஒரு வகையில் பார்க்கப் போனால், இந்த மூன்று பேர் வழிகளும் தங்களுக்குத் தன்னம்பிக்கை இருப்பதாகவே சொல்லிக் கொள்கின்றனர். உழைத்துச் சம்பாதித்து சாப்பிடுபவன், தன் கால் கரங்களின் மீதும், சரீர பலத்தின்மீதும் நம்பிக்கை கொண்டு, அப்படி ஆடி ஓடி பாடுபட்டு உழைத்துப் பிழைக்கிறான் என்பதில் சந்தேகமில்லை. இதிலும் சில பேர்கள், இந்த தன்மானம்—தன்னம்பிக்கை—சுய உழைப்பு என்ற தத்துவங்களை ஆய்ந்து அறியாமலேயே, வெறும் இயந்திரங்களைப் போல் சுழன்று கொண்டே அதாவது உழைத்துக் கொண்டே இருக்கின்றனர்.

உதாரணமாக கூலிக்காரர்களை எடுத்துக் கொள்வோம். இவர்களுக்குத் தன்னம்பிக்கை இருக்கிறதா—இல்லையா என்பதை அவர்களிடம் கேட்டால் கூட பதில் சொல்ல மாட்டார்கள். ஏனெனின், அவனுக்குப் பகுத்தறியும் தன்மையாகிய கல்வி அறிவு கிடையாது. காலை முதல் மாலை வரை, சொன்ன வேலைகளைச் செய்து பாடுபட்டு உழைப்பான். மாலையில் கொடுத்த கூலியை வாங்கிக் கொள்வான்; சில சமயங்களில் கூலிப்பணம் போதாதென்று சண்டைப் போட்டு அதிகப் பணம் வாங்கிக் கொண்டுபோவான்.

கூலிவேலை செய்பவனும் மனிதன்தான்; கூலியாளிடம் வேலை வாங்குபவனும் மனிதன்தான். இருவர்க்கும் கால் கைகள் உண்டு; அறிவாற்றல் உண்டு; தேக பலம் உண்டு; ஆனால், ஒருவன் அதை உணர்கிறான்; மற்றொருவன் அதை உணர்வதில்லை. இங்ஙனம் உணரத் தகுதியில்லாதவன் தன் மதிப்பைத் தெரிந்து கொள்ள இயலாதவன், தன்னுடைய 'விதி' என்று எதன் மீதோ பழி போட்டு வாளாயிருந்து விடுகிறான்.

"உன்னைப் போல் மனிதனாக உள்ள முதலாளி, பங்களா வாசியாகவும், மோட்டார் ஓட்டியாகவும், பணவசதி யுடையவனாகவும் இருக்கிறானே, நீ மட்டும் ஏன் அவனிடத்தில் கூலி வேலை செய்து பாடுபட்டு உழைத்து, உணவுக்கும் உடைக்கும் அல்லல் பட்டு அலைகிறாய்?" என்று கேட்டால் இதை அவன் "தலைவிதி" என்கிறான்; அந்தோ!

* * * *

தலைவிதிக்கும் தன்னம்பிக்கைக்கும் சம்பந்தம் இல்லை. தன்னம்பிக்கை உலக வியல் சம்பந்தப்பட்டது. தலைவிதி ஆத்மிகம்

187085 3L

சம்பந்தப்பட்டது. ஆத்மிகம், மறு லோக வாழ்வுக்கு வழி காட்டுவதாகும். இதுவும் மனிதர்கட்கு அத்தியாவசியமான ஒரு சாதனம் தான். இதற்காக ஒவ்வொருவரும், தலைவிதி—தலைவிதி என்று சொல்லிக் கொண்டு, உழைக்காமல், யோசிக்காமல், கால் கை அசைக்காமல் இருந்து விட்டால், வயிற்றுக்குச் சோறும் உடலுக்கு உடையும் கிடைத்து விடுமா? எனவே உழைப்பும் வேண்டும், மனோ உறுதியும் வேண்டும், தெய்வ நம்பிக்கையும் வேண்டும், இடம் பொருள் ஏவலை அறிந்து நடந்து கொள்ளவும் வேண்டும். இதைத் தான் 'தன்னம்பிக்கை' என்று ஒரு சாரார் சொல்லுவர்.

நமது தீனுல் இஸ்லாம்—என்னும் சத்திய சன்மார்க்கம் எல்லா காலத்துக்கும், எல்லா தேசத்துக்கும், எல்லா சமூகத்துக்கும் பொதுவானது. அனைத்து மக்களுக்கும் இதமான விஷயங்களை எடுத்துப் போதிப்பது. எனவே ஒருவன், இஸ்லாத்தின் கட்டளை-போதனைகள் பிரகாரம் நடந்து கொண்டொழுகினால், அவன் லோகார்த்தத்திலும் ஆத்மார்த்தத்திலும் பரிபக்குவ மடைந்து, விசிராந்தியும் விமோசனமும் அடைவான்.

இதை அடிப்படையாகக் கொண்டு, இஸ்லாம் மதம் கட்டளையிடும் தன்னம்பிக்கையை நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். நம் மனித சுபாவத்தில் என்னென்ன சக்திகள் அடங்கியிருக்கின்றன என்பதை இஸ்லாம் மதம் எடுத்துக் கூறுகிறது. உறுதியும், உழைப்பும் ஒவ்வொரு மனிதர்க்கும் அத்தியாவசியம் என்று இஸ்லாம் வற்புறுத்திக் கூறுகிறது. இதை "தவக்குல்" என்று அரபியில் சொல்கிறோம்.

"வமன் யத்தவக்கல் அலல்லாஹி பஹுவ ஹஸ்புஹு"

என்பது நம் வேதவாக்கியம். "எவன் அல்லாஹ்வின் மீது 'தவக்குல்' வைக்கின்றானோ அவனுக்கு அல்லாஹு தஆலா போது மானவன்" என்பது இதன் சொற்பொருள். அதாவது, ஆண்டவன் மீது முழுநம்பிக்கை வைத்து உழைப்பவனுக்கு ஆண்டவனுடைய அருளும் பாக்கியமும் கட்டாயம் கிடைக்கும் என்பது இதன் கருத்துரை.

'தவக்குல்' என்பதை 'தன்னம்பிக்கை' என்றும் சொல்லலாம். அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பவனுக்குத் தன்மீது

நம்பிக்கைவைப்பதன் தத்துவம் விளங்கும். தூய மனதோடு தன்மீது நம்பிக்கை வைப்பது ஆண்டவன் மீது நம்பிக்கை வைப்பதின் சாயலேயாகும்.

* * * *

இனி 'தவக்குல்' என்ற சொல்லுக்குச் சில பேர்வழிகள் (சோம்பேறிகள்) தவறான கருத்து தந்து தவறான வழியில் நடந்து கொள்கிறார்கள். இவர்களின் செயலும் சொல்லும் விசித்திரமாக இருக்கும். "தவக்கல்த்து அலல்லாஹ்" (நான் அல்லாஹ்வின் மீது புறம் சாட்டிவிட்டேன்) என்று சொல்லி விட்டு, இவர்கள் ஒரு காரியமும் செய்யாமல், ஒரு துறையிலும் உழைக்காமல், வீட்டிலோ பள்ளிவாசல் மூலையிலோ உட்கார்ந்து கொண்டு, வாணை வீணாக்குவார்கள்; சாப்பாட்டுக்கும் வாழ்க்கைக்கும் வசதியில்லாமல், அல்லாஹ்வின் மீதே குறை கூறிக் கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு 'தவக்குல்' என்பதற்குப் பொருள் தெரியாது. தன்னம்பிக்கை என்பதன் தத்துவம் புரியாது.

உண்மையான 'தவக்குல்' என்ன என்பதற்கு, நமது நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் செயல்பூர்வமான தத்துவத்தை விளக்கிக் காட்டியுள்ளார்கள். ஒரு ஒட்டக மோட்டி, பள்ளிவாசலுக்கு வந்து உட்கார்ந்திருந்தார். அவரை நாயகம் (ஸல்) அவர்கள் க்ஷேமம் விசாரித்தார்கள்; உபசாரம் செய்தார்கள். அவர் வெளியூரிலிருந்து வந்தவர் என்பதை நாயகம் (ஸல்) அவர்கள் அறிந்து கொண்டு, உணவும் அளித்து ஆதரித்தார்கள்; அந்த மனிதர் மிகவும் நேர்மையாளராகவும், தெய்வபக்தியுடையவராகவும் இருந்தார். அடிக்கடி அல்லாஹு தஆலாவுடைய திருநாமத்தை உச்சரிப்பவராகவும் இருந்தார்.

நாயகம் (ஸல்) அவர்கள், அவரது நல்ல தன்மையைப் பாராட்டிவிட்டு, "நண்பரே, உமது ஒட்டகம் எங்கே?" என்று கேட்டார்கள். அதற்கவர், "அல்லாஹ்வின் மீது தவக்குல் வைத்து மைதானத்தில் விட்டுவிட்டேன்" என்று சொன்னார். அதைக் கேட்டு நாயகம் (ஸல்) அவர்கள், "நண்பரே, தவக்குல் வைப்பதற்கும் ஒரு வழிமுறை உண்டு. முதலில் உம்முடைய ஒட்டகத்தைப் பிடித்து வந்து, ஒரு மரத்திலோ கம்பத்திலோ கட்டிப் போடுவீராக; பிறகு அல்லாஹ்வின் மீது தவக்குல் வைப்

பிராக. ஒட்டகத்தைக் காட்டில் விரட்டிவிட்டு அல்லாஹ்வை நம்பிக் கொண்டிருப்பதில் பலன் இல்லை" என்று திருவுள மானார்கள்.

* * * *

இந்தச் சம்பவத்தி லிருந்து நாம் அறிந்து கொள்ளும் படிப் பினைதான் பிரதானமானது. ஒரு காரியத்தைச் செய்து விட்டு அதன் பலாபலனுக்காக ஆண்டவன் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். காரியத்தைச் சரிவரச் செய்யாமல், ஆண்டவன் மீது மட்டும் நம்பிக்கை வைப்பது, ஆண்டவன் மீது பழியைப் போட்டு விட்டுத் தப்பித்துக் கொள்ளும் சோம்பல் தன்மைக்கு ஒப்பாகும்.

"பாப்பாத்தியம்மா, மாடுவந்தது, பார்த்துக்கோ" என்று நம் தமிழ் நாட்டில் ஒரு பழமொழியுண்டு. இதன் உட்பொருள் நாட்டுப்புற பாமரமக்களுக்குப் புரிந்ததுதான். நாட்டுப்புறங்களில், நல்ல குடும்பஸ்தர்கள் பசு, மாடு வைத்திருப்பார்கள். மாடு மேய்க்கும் இடையன், காலையில் வந்து மாட்டை அவிழ்த்து மேய்வதற்காக, மந்தைக்கு ஓட்டிக் கொண்டு போய் விடுவான்; மாலையில் பொழுது மங்கும்போது திரும்ப ஓட்டிக்கொண்டு வந்து, அந்தந்த வீட்டு மாட்டை, அந்தந்த வீட்டுத் தொழுவத் தில் பொறுப்புடன் கட்டி வைத்து விட்டுப் போவான். மாதக்கடை சியில் சம்பளமும் உம்பளமும் வாங்கிச் சென்று, வாழ்க்கை நடத்துவான். இது பழக்க வழக்கம்.

ஆனால், ஒரு சோம்பேறி, இந்த வேலைக்குப் புதிதாய் வந்தான் போல் தெரிகிறது. அவன், சம்பிரதாயப்படி மாட்டை வீட்டுத் தொழுவத்திலிருந்து அவிழ்த்து ஓட்டிக் கொண்டு போவதில்லை; மாலையிலும் ஓட்டிக்கொண்டு வந்து பொறுப்புடன் தொழுவத்தில் கட்டி வைப்பதில்லை. இப்படிப் பட்டவன், ஒரு பிராம்மணர் வீட்டு பசுமாட்டை, வீட்டுத் தொழுவத்தில் போய் கட்டிவைக் காமல், தெருவில் நின்றபடியே, "பார்ப்பாத்தியம்மா, மாடு வந் திருக்கிறது; பார்த்துக்கோ" என்று சொல்லி விட்டுப் போனான்.

இதில் இவனுடைய மனப்போக்கு என்ன வென்றால், "அம்மா, மாடு வந்துவிட்டது; இது உன்மாடு, என் மாடல்ல; இதைப் பிடித்துக் கட்டினால், கட்டிக் காப்பாத்து; இல்லாவிட்டால், அது எக்கேடு கெட்டாவது போகட்டும்" என்பதுதான்.

* * *

இது பொறுப்பற்ற தனம்; கடமை மறந்த போக்கிரித் தனம், உழைப்புக்குப் பயப்படும் சோம்பேறித்தனம். இத்தகைய சோம் பேறித் தனத்துடன் சில பேர்கள், முஸ்லிம்களிலும் இருக் கிறார்கள். இவர்கள் தான் தன்னம்பிக்கை யற்ற பேர்வழிகள். உழைக்காமல், பாடுபடாமல், செயலாற்றாமல், சும்மா இருந்து கொண்டு, அல்லாஹு தஆலா மீது பழியைப் போடுபவர்கள்: “அல்லாஹ், என் தலையில் இப்படி எழுதி விட்டான்; என்னை ஏழையாக்கி விட்டான்; என் பக்கத்து வீட்டுக்காரனைப் பணக்கார னாக்கி விட்டான்: நான் இறைவன் மீது ‘தவக்குல்’ வைத்துக் கொண் டிருந்தும், என் கஷ்டகாலம் தீரவில்லை” என்று குறை சொல்லித் திரிவான்.

பள்ளிவாசலில் உட்கார்ந்து கொண்டு, அல்லாஹ் இடம் ‘ரிஸ்கு’ க்குரிய துஆவை மட்டும் ஓதிக் கொண்டிருப்பதால், சாப் பாடு எதிரில் வந்து விடாது. இது சோம்பல் வாழ்வு.

“லைஸ லில் இன்ஸானி இல்லா மாஸஆ” என்பது கடவுள் கட்டளை. “உழைப்புக்குத் தக்கபடிதான் மனிதனுக்கு ஊதியம் கிடைக்கும்” என்பது இதன் பொருள்.

“உங்களில் ஒருவன், காட்டுக்குப்போய் விறகு உடைத்து, முதுகில் சுமந்து வந்து, கடைத்தெருவில் விலை கூவி விற்று, அந்தக் காசைக் கொண்டு தன் மனைவி மக்களுக்கு உணவு பொருள் வாங்கிக் கொடுப்பானானால், இவனே சிறந்தவன்; பிறரிடம் கை நீட்டி யாசகம் கேட்கும் சோம்பேறியை விட இவன், மிகமிக மேலானவன்.”

இதுவும் எம்பெருமானார் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் உபதேசமாகும். இந்த ஹதீதை ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி) ரிவாயத்து செய்திருக்கிறார்கள்.

* * *

சோதரீர்! உழைத்து சாப்பிடுவதே முஸ்லிம்களின் இல க்ஷணம். ஹலாலான வழியில் சம்பாதித்து உண்பதும் ஒரு வகை இபாதத்து தான். தன்னம்பிக்கையுள்ள ஒவ்வொரு முஸ்லிமும், இந்த ஹலாலான வழியில் நடந்து கொள்வார்கள் என்பதில் சந்தேக மில்லை. எனவே முஸ்லிம்களுக்குத் தன்னம்பிக்கை அவசியம் வேண்டும். வஸ்ஸலாம்.

# தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்

நமது நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட திருக் குர்ஆனே உலக மக்கள் அனைவருக்கும் பொது வேத மாகவும், இஸ்லாம் மார்க்கத்திற்கு ஆதாரமாகவும் இருந்து வருகிறது. முஸ்லிம்கள் இஸ்லாம் மதத்திற்கு ஆதாரமா யுள்ள திருக்குர்ஆனின் கட்டளைகளையும் அரிய போதனை களையும் தெரிந்து கொள்வது அவசியமாகும். இஃது திருக்குர் ஆனின் **தப்ஸீரை** தமிழ் பாஷையில் **ஸுன்னத்து வல் ஜமாஅத்தின்** உலமாக்களாலும் இமாம்களாலும் எழுதப் பட்ட தப்ஸீர்களை ஆதாரமாகக் கொண்டு, எழுதப்பட்டது.

இந்த தப்ஸீரில் குர்ஆன் ஆயத்துகளை அறபியில் அழ காக எழுதி போட்டோபிளாக் செய்யப்பட்டு தனித்தனியாக ஆங்காங்கு அமைத்தும் அதன் கீழ் சரியான தர்ஜுமாவும், தப்ஸீர் என்னும் விரிவுரையும், வியாக்யானமும், ஷஃனு நுஸுல் என்னும் ஒவ்வொரு ஆயத்தும் இறங்கிய காரணங் களும், அதற்கேற்ப ஹதீது, ரிவாயத்து, ஹிக்மத்து, பாயிதா, கிஸ்ஸா, அஜீபா முதலிய அரும் பெரும் ஆதாரங்களும் ஒருங்கே சேர்த்து அமைக்கப் பெற்றிருக்கின்றன.

**முதல் பாகம்:** ஸூறத்து பாத்திஹா—பகருவி லிருந்து ஸூறத்துன்னிஸா முடிய (ஒரு மன்ஸில்) 5¼ ஜுஸு வரை — விலை ரூ. 10

**இரண்டாம் பாகம்:** ஸூறத்துல் மாயிதா முதல் ஸூறத்துத் தவ்பா முடிய — விலை ரூ. 10

**மூன்றும் பாகம்:** ஸூறே யூனுஸ் முதல் ஸூறத்துக் கஹ்ல் முடிய 7-ஸூறுக்களின் தப்ஸீர் — விலை ரூ. 10

**நான்காம் பாகம்:** ஸூரத்துல் இஸ்ராஉ முதல் ஸூறத்து நூர் முடிய 8-ஸூராக்களின் தப்ஸீர் — விலை ரூ. 10

**ஐந்தாம் பாகம்:** ஸூறத்து புர்க்கான் முதல் ஸூறத்து யாஸீன் முடிய 12-ஸூராக்கள். — விலை ரூ. 12

**ஆறும் பாகம்:** ஸூறத்து ஸாப்பாத் முதல் ஸூறத்து ஹுஜ்ராத் முடிய 13-ஸூராக்கள். — விலை ரூ 12

**ஏழாம் பாகம்:** சூறே காப் முதல் ஸூறத்து நாஸ் வரை 41-ஸூறுக்கள் — விலை ரூ. 16

---

**ஹாஜி எம். எ, ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,**
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# மனிதனின் அதிசய குணங்கள்

M. A. முஹம்மது ஷரீப்

பேய், பிசாசு அல்லது ஆவி இது போன்ற விஷயங்களில் நம்மில் அநேகருக்கு நம்பிக்கை உண்டு. சிலர் இதெல்லாம் கட்டுக் கதை என்று அவைகளைப் புறக்கணிப்பது போன்று எள்ளி நகையாடுவதும் உண்டு. எது எப்படி இருப்பினும் இவைகளைப்பற்றி உலகின் பல்வேறு பாகங்களில் பலர் ஆராய்ச்சிகள் நடத்துகின்றனர். அவ்வாராய்ச்சியாளர்கள் வெளியிட்ட பல்வேறு அறிக்கைகளின் தொகுப்பைக் கீழே காணலாம்.

பேய், பிசாசு அல்லது ஆவி என்பவை யாவை? அவைகளுக்கு உருவம் உண்டா அல்லது இல்லையா? இவற்றைப் பற்றி பலர் பலவாறு கூறுவதுண்டு. ஒரு மனிதன் திடீரென இறந்து விடுகிறான். அவன் மனதில் எவ்வளவோ ஆசைகளை அடக்கி வைத்திருக்கலாம். அவைகள் நிறைவேறாமல் அம்மனிதன் இறந்து விட்டால் அவன் ஆவியுருவில் இவ்வுலகிற்கு வந்து தன்னுடைய நிறைவேறாத ஆவல்களை மற்றையோரைக் கண்டு பூர்த்தி செய்து விடுகின்றான் என்று சிலர் கூறுவர். இக்கூற்று உண்மை என நிரூபணம் செய்யும் வகையில் சில காலம் முன்பு அமெரிக்காவில் ஓர் நிகழ்ச்சி நடைபெற்றது. மேற்கூறிய இடத்தில் "ஜான்" என்றொரு மனிதன் தன் குடும்பத்தினருடன் வசித்து வந்தான். அவனுக்கு மூன்று குழந்தைகள் இருந்தன. அவனது மனதில் நீங்காத ஆசையொன்று குடி இருந்தது. அவனது கடைசிக் குழந்தைக்கு ஒரு வயது நிறைந்த பிறகு அக்குடும்பத்தினர் யாவரும் சேர்ந்து ஓர் புகைப்படம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது. இதை அவன் அடிக்கடி தன் மனைவியிடம் வெளிப்படையாகக் கூறிவந்தான். ஆனால் அக்குழந்தைக்கு வயது ஒன்பது மாதம் நிறைவதற்குள் அவன் இறந்து விட்டான். அவனது ஆசையும் அவனது சவத்துடன் கல்லறைக்குள் புதைக்கப்பட்டது. அக்குழந்தைக்கு ஒரு வயது நிறைந்ததும் அவனுடைய மனைவிக்கு இறந்து போனத் தன் கணவனின் ஆவல் நினைவிற்கு வந்தது. உடனே அவள் ஒரு புகைப்பட நிலையத்திற்குத் தன் மூன்று குழந்தைகளையும் அழைத்துச் சென்று ஒரு புகைப்படம் பிடிக்க ஏற்பாடுகள் செய்தாள். தன் கணவனின் நினைவாக அவள் தனக்குப் பக்கத்தில் ஓர் நாற்காலியைப் போட்டு அதனைக் காலியாக வைத்துப் புகைப்படம் எடுத்துக்கொண்டாள். அப்புகைப்படத்தைக்

கழுவி பிரிண்ட் போட்ட பொழுது அதிலே ஓர் ஆச்சரியத் தக்க விஷயம் இருந்தது. இறந்துபோன அம்மனிதனின் உருவமும் அப்புகைப்படத்திலே இருந்தது. அவனுக்காக போடப்பட்டு காலியாக இருந்த நாற்காலியில் அவன் உட்கார்ந்து இருப்பதைப் போன்று அப்புகைப்படத்தில் இருந்தது. இப்படியாக அவனது நிறைவேறாத ஆவல் நிறை வேறியது. முதலில் இதை யாரும் நம்பவில்லை. ஆனால் ஒன்றல்ல, பலமுறைகள் இம்மாதிரி புகைப் படங்கள் எடுத்த ஒவ்வொரு சமயமும் அவனது உருவமும் அப் புகைப்படத்தில் இருந்தது. அவனது மனைவி கடைசிக்குழந்தை யைத் தவிர மீதி இரு குழந்தைகளுடனும் புகைப்படம் எடுத்துக் கொண்ட சமயம் அவனது உருவம் அப்புகைப் படத்தில் காணப் படவில்லை.

மேற்கூறிய இந்நிகழ்ச்சியிலிருந்து அம்மனிதன் நிறைவேறாத தன்னுடைய ஆவல் நிறைவேறும் பொருட்டே ஆவியுருவில் இவ் வுலகில் சஞ்சரித்துள்ளான் என்று தெரியவருகின்றது. மேலும் ஆவிகள் நம் போன்ற மனிதர்களின் கண்களுக்குத் தெரிவதில்லை என்றும் அறிந்து கொள்ளலாம்.

ஆவி நூல் அறிஞர்கள் தங்களால் இயன்ற முறையில் இவை களைப்பற்றிய ஆராய்ச்சிகள் நடத்துகின்றனர். அவ்வாராய்ச்சி களின் முடிவுகள் அவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்துபவைகளாக இருக்கின்றனவே யன்றி அவர்களுக்கு விளக்கம் தருபவன வையாக இல்லை. உதாரணமாக 1955-ம் ஆண்டு "பாஸ்டன்" (Boston) என்னு மிடத்தில் "வெல்டிங்' வேலைகள் செய்யும் தாமஸ் விட்டேகர் என்பவர் ஒரு குழாய் வேலை செய்து கொண் டிருந்தார். அவ்வமயம் அவருக்கு உடலில் திடீரென நடுக்கத்தின் அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்தன. அவருக்கு இனம் புரியாத எண்ணங்கள் தோன்றின. அவர் தன்னுடன் வேலை பார்க்கும் மற் றொருவரிடம் சொன்னார், "எனக்கே என்னவென்று புரியவில்லை. இங்கிருந்து நான்கு மைல்களுக்கு அப்பாலுள்ள ஓர் பள்ளத்தில் (அங்கும் அதே வேலை நடந்து கொண்டிருந்தது.) ஏதோ ஆபத் தான விஷயங்கள் நடந்துள்ளன. இவ்வாறு என் மனத்திற்கு தோன்றுகின்றது என்றார். அவருடன் வேலை செய்பவர் அவரிடம், மேற் கூறிய அப்பள்ளத்தில் வேலை எதும் நடைபெற வில்லை என்றும், அங்கு வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் அங்கு யாரும் இல்லை என்றும் கூறினார்.

அவர்கள் தங்களது வேலைகளைத் தொடர்ந்து செய்ய ஆரம்பித் தனர். ஆனால் தாமஸுடைய எண்ணங்கள் வலுப்பெற்றன. "அங்கு யாரோ ஆபத்தில் சிக்கியுள்ளனர். நான் அங்குச் சென்று பார்க்கப் போகின்றேன்" இவ்வாறு கூறிவிட்டு அவர் மேற்கூறிய

அவ்விடத்தை நோக்கி விரைந்தார். அவ்விடத்தை அவர் அடைந்ததும் திடுக்கிட்டார். ஏனெனில் பதினுன்கு அடி ஆழமுள்ள அப்பள்ளத்தின் நான்கு சுவர்களும் இடிந்து விழுந்து அப்பள்ளத்தை மூடிக் கொண்டு இருந்தன. ஒரு மனிதனின் கை மட்டும் அம்மண்ணுக்கு இடையில் இருந்து வெளியே நீட்டிக் கொண்டு இருந்தது. உடனே தாமஸ் அப்பள்ளத்திலிருந்த மண்ணைத் தோண்டி எடுத்து, அம்மனிதனின் உடலை எடுத்தார். அம்மனிதன் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்தார். அம்மனிதன் தாமஸுடைய உயிர் நண்பனுன "ஜான் சல்லிவன்" என்பவர். தாமஸ் அவரை மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று அவருக்குத் தகுந்த சிகிச்சை அளித்து அவரது உயிரைக் காப்பாற்றினுர்.

தாமஸுக்கு ஜான் மேற்கூறிய பள்ளத்தில் வேலை செய்து கொண்டிருக்கின்ருர் என்பதைப் பற்றி எள்ளளவேனும் தெரியாது. அவர் ஜான் வேறெங்கோ இருப்பதாக எண்ணங் கொண்டிருந்தார். இருப்பினும் அப்பள்ளத்தின் சுவர்கள் இடிந்து விழுந்த நேரமும், அப்பள்ளத்தில் ஏதோ ஆபத்து நிகழ்ந்துள்ளது என்று தாமஸுக்கு எண்ணங்கள் தோன்றிய நேரமும் ஒன்ருக இருந்தன. உடல் நிலை தேறிய பிறகு ஜான் கூறினுர், "நான் அப்பள்ளத்தில் மண்ணுக்கு அடியில் புதையுண்டு மூச்சுத் திணறிக் கொண்டிருக்கும் சமயம் எனக்கு தாமஸுடைய முகம் நினைவுக்கு வந்தது" என்ருர்.

அமெரிக்காவிலுள்ள தலை சிறந்த ஆவிநூல் ஆராய்ச்சியாளர் இருவர் இதனைப்பற்றி ஆறுமாதங்கள் ஆராய்ச்சிகள் நடத்தி கீழ்க்கண்ட முடிவிற்கு வந்தனர். "இந்நிகழ்ச்சி 'டெலிபதி' (Telepathy) எனப்படும் 'மனவழி' அதாவது இரு நெஞ்சங்களிடையே ஒன்று பட்ட அல்லது ஒன்றுக் கொன்று சம்பந்தப்பட்ட எண்ணங்கள் ஒரே நேரத்தில் ஏற்படுவது என்பதன் உண்மையான உதாரணம்" என்றனர். தாமஸுக்கு ஜான் அங்கிருக்கின்ருர் என்பதைப் பற்றி சிறிதேனும் தெரியாது என்ற முடிவிற்கே அவர்களும் வந்தனர். அப்படி யானுல் இந்நிகழ்ச்சியின் தன்மை? ஒன்றுக் கொன்று குருட்டாம் போக்கில் நடந்திருக்கலாம், ஆனுல் இது ஒரு தனிப்பட்ட உதாரணம் அல்ல. இதைப் போன்று பல நிகழ்ந்துள்ளன. அப்படியாயின் இவைகளின் உட் பொருள் நம்மால் கூற முடியாத ஒன்றே.

சரித்திரத்தின் தொடர்ச்சியிலே "ஆவிகளைக் கொண்டு தங்களைச் சுற்றி இருக்கும் பொருள்களை தங்களுடைய விருப்பப்படி யெல்லாம் செய்யும்படிக்கு ஆற்றல் படைத்துள்ள வித்தை மனிதர்களைப்பற்றி நிறைய குறிப்புகள் உண்டு. இத்தாலிய

குடியானவப் பெண்மணி ஒருத்தி அத்தகைய ஆற்றல்களைப் பெற்றிருந்தாள். அவள் பெயர் "எசோபியா பலாடினோ" என்பது. 1854–ம் ஆண்டு பிறந்தவள். அவளைப்பற்றி ஒரு திருடி என்றும், பொய் பேசுபவள் என்றும் மேலும் ஆவிகளுடன் தொடர்பு கொண்டவள் என்றும் கூறப்பட்டது. அவளுடைய ஆற்றல்களைப் பற்றி குறிப்பாக அவள் சுற்றியுள்ள பொருள்களை அவைகளைத் தொடாமலேயே அவளுடைய விருப்பப்படி ஆட்டி வைக்கும் தன்மை. மேலும் அவள் மாண்டலின் எனப்படும் ஒருவகை வாத்தியக் கருவியை அதனைத் தொடாமலேயே வாசிக்க வைப்பது இவைகளைப் பற்றிய செய்தி உலகெங்கும் பரவியது.

இங்கிலாந்தில் உள்ள ஆவிநூல் ஆராய்ச்சியாளர் சங்கத்தின் பிரதிநிதியாக ஹெர்வர்டு காரிங்டன் என்பவர் அவளைப் பற்றி ஆராய்ந்து தகவல்களைக் கண்டறிய நேபிள்ஸுக்குச் சென்றார். அவர் கூறுகின்றார்: அவளது கைகளும், கால்களும் கட்டப்பட்டிருந்தன. அவளது தலை எனது தோளில் சாய்ந்திருந்தது. அவளது ஒவ்வொரு பகுதியும் குறிப்பாய் கவனிக்கப்பட்டது. இருந்தும் மிகவும் ஆச்சரியத்தக்க சம்பவங்கள் நடைபெற்றன."

காரிங்டன் மேலும் குறிப்பிடுகின்றார்: அவளது கைகளும் கால்களும் கட்டப்பட்டிருந்தன. இருந்தும் பல முறைகள் அவள் சிறிது தூரத்தில் இருந்த ஒரு மேஜையைச் சிறிது உயர எழும்பும்படிக்குச் செய்தாள். ஒரு முறை அவளுக்குச் சற்றருகில் அமர்ந்திருந்த ஒருவரின் பைக்குள் இருந்து அவரது சுருட்டுப் பெட்டியை எடுத்து அருகிலிருந்த ஒரு மேஜையின் மீது எல்லோரும் பார்க்கும்படியான இடத்தில் வைத்து, அந்தப் பெட்டி தானாகத்திறந்து அதிலிருந்து ஒரு சுருட்டு தானாகக் கிளம்பி அவரது பற்களுக்கிடையில் வைக்கும்படிக்குச் செய்தாள்.

எசோபியா மாண்டலின் வாத்தியத்தை வாசித்ததுடன் நிற்கவில்லை. அவ்வாத்தியம் அவ்வறையில் மேலே எழும்பி சிறிது நேரம் மிதந்து கொண்டே வாசிக்கும்படியும் செய்தாள். இது சுமார் ஒரு நிமிடநேரம் நடந்தது. சுற்றியிருந்தோர் யாவரும் இதனைக் கண்டார்கள்.

அவ்வாத்தியத்தில் கயிறுகளோ வேறெதுவும் கட்டித் தொங்கவிடப்படவில்லை. அவளைப் பற்றித்தான் என்ன வென்பது? இவ்வகை ஆற்றலை ஆங்கிலத்தில் சைகோ கினஸிஸ் (Psychokinesis) என்கின்றனர். ஆவிகளைக் கட்டுப்படுத்தி அவற்றின் மூலம் தங்கள் எண்ணங்களைப் பூர்த்தி செய்து கொள்ளுதல். 1888–ம் ஆண்டிலிருந்து 1910–ல் அவள் இறக்கும் வரையில் உலகின் மிகப் பெரிய நீதிஸ்தலங்களி லெல்லாம் அவள் விசாரிக்கப்பட்டாள். உலகின் கண்களுக்கு அவள் இன்னும் ஒரு புரியாத புதிர்தான்.

சிறிது காலத்துக்குப்பின் நடக்க இருப்பவைகளைப் பற்றி சிலர் ஜோசியம் கூறுவர். சிலருக்குப் பிற்காலத்தில் நடக்க இருப்பவை களைப் பற்றி முன்பே தெரிந்து விடுகின்றது. அவ்வகைச் செயலை ஆங்கிலத்தில் "பிரிகாக்னிஷன்" (Precognition) என்று விளக்கம் கூறுகின்றனர். மார்க் ட்வெயின் என்னும் ஆசிரியர் ஒரு வருக்கு இம்மாதிரியான தன்மை இருந்தது. இளவயதில் அவரும் அவரது சகோதரரும் மிஸிஸிபி நதியில் நீராவிப் படகு ஓட்டும் வேலையில் ஈடுபட்டிருந்தனர். ஒருநாள் அவர் தனது சகோதரியின் வீட்டில் தூங்கிக் கொண்டிருக்கும் சமயம் அவருக்கு ஓர் கனவு ஏற்பட்டது. அக்கனவில் அவரது சகோதரன் ஹென்றி இறந்து விட்டதாகவும் அவரது உடல் ஓர் உலோக சவப்பெட்டியில் இருப்ப தாகவும் ஹென்றியின் மார்பில் ஒரு கொத்து வெள்ளை மலர்களும் அதன் நடுவில் ஓர் சிகப்பு ரோஜாவும் இருப்பதாகவும் கண்டார். 'ட்வெயின்' இக்கனவினைத் தனது சகோதரியிடம் கூறினார். பிறகு அவர் இதைப்பற்றி மறந்து போய் விட்டார். சிறிது காலம் கழித்து அவர் "மெம்பிஸ்" என்ற இடத்திற்கு வந்ததும் "அவரது சகோதரன் ஹென்றி ஏறிச் சென்ற நீராவிப் படகு வெடி விபத் தால் உடைந்து அவரது சகோதரன் இறந்து போனார்" என்ற செய்தி கேட்டுத் திடுக்கிட்டார். பிணங்களைப் புதைக்கும் இடத் திற்குச் சென்றார். அங்கு அவ்வெடி விபத்தில் இறந்து போன எல் லோருடைய உடல்களும் இருந்தன. ஆனால் ஹென்றியின் உடல் மட்டும் ஓர் உலோக சவப் பெட்டியில் இருந்தது. அவர் வருத் தத்துடன் இறந்து போன தன் சகோதரனின் உடலைப் பார்த்துக் கொண்டிருக்கும் சமயம் ஓர் வயதான மாது அருகே நெருங்கி ஹென்றியின் சவத்தின் மார்பில் ஒரு கொத்து வெள்ளை மலர்களை வைத்தாள். ட்வெயின் உற்று நோக்கினார். அம்மலர்களின் நடுவே ஒரு சிகப்பு ரோஜா மலரும் இருந்தது. ஆம் அவரது கனவு அப்படியே பலித்து விட்டது. இதுவும் ஒரு தனிப்பட்ட உதாரணம் அல்ல. இதனைப்போல் எவ்வளவோ நிகழ்ச்சிகள் உள்ளன. காரணம் கூறமுடியாத நிலையிலேயே நாம் உள்ளோம்.

1939–ல் இத்தாலியில் உள்ள கடான் ஜோரோ (catanzoro) என்னும் இடத்தில் 17–வயதுப் பெண் "மேரியா டலாரிகோ" (maria Talarico) என்பவள் தனது உறவினர் ஒருவருடன் ஒரு நாள் மாலை நடந்து சென்று கொண்டிருந்தாள். மூன்று வருடங்களுக்கு முன்பு (1936–ல்) ஒரு பாலத்தில் ஒரு வாலிபன் தற்கொலை செய்து கொண்டான். மேரியாவும் அவள் உறவினரும் அவ்விடத்திற்கு வந்தனர். திடீரென்று மேரியா மயக்கமுற்றாள். அவள் உணர்வு பெற்றதும் தான் இறந்துபோன அவ்வாலிபன் "கிஸப்பி வெரால்டி" (Giuseppe Veraldi)

என்ருள். "நான் தான் கிஸப்பி வொால்டி" மேரியா இவ்வாறு கூறினுள். அவளது குரல் ஒரு ஆணுடையதாக மாறி இருந்தது. அவள் இறந்து போன அவ்வாலிபனின் கையெழுத்தைப் போன்று எழுதினுள். குடிக்கவும், சூதாடவும் ஆரம்பித்தாள். அவ்வாலிபன் தற்கொலை செய்யவில்லை என்றும் கொலை செய்யப்பட்டான் என்றும் கூறினுள். மேலும் கொலை நடந்த விபரத்தையும் கூறினுள். சுற்றியிருந்தோர் அவளைப் பைத்தியம் பிடித்தவள் எனக் கூறினர். ஆனுல் சரியாக பன்னிரண்டு வருடங்கள் கழித்து அக்கொலையில் பங்கு கொண்டிருந்த ஒருவர் அர்ஜென்டைனுவிலிருந்து குற்றத்தை ஒப்புக்கொண்டு கடிதம் எழுதி இருந்தார். அவர் கூறிய விபரங்களும், மேரியா சொன்னவைகளும் ஒன்ருய் இருந்தன.

இவைகளின் விளக்கம்? மேரியா அக்கொலையில் சம்பந்தப்பட்டிருந்து மன உறுத்தல் தாளாது சொல்லியிருக்கலாம் அல்லது அவள் அக்கொலை நடக்கும் சமயம் அதனைப் பார்த்திருக்கலாம் என்று நம்மால் சுலபமாகக் கூற முடியும். ஆனுல் அவள் இறந்து போன வாலிபனின் கையெழுத்தில் எழுதியது? மனநூல், உளநூல், ஆவிநூல் ஆராய்ச்சி யாளர்களை இன்னும் குழப்பத்திலேயே ஆழ்த்தி வைத்திருக்கும் மற்ருெரு நிகழ்ச்சி. இத்தன்மையை ஆங்கிலத்தில் "கிளேர் வொயன்ஸ்" (Clair voyance) அதாவது தூரத்தில் நடப்பவைகளை நமக்குத் தெரிந்த உணர்ச்சிகளின் வழியே அல்லாமல் வேருெருவகை உணர்ச்சியின் மூலம் அறிந்து கொள்ளல்.

இவைகளைப் போன்று ஆவிகளைப் பற்றி உலகெங்கும் நிறையப் புதிர்கள் உள்ளன. ஆராய்ச்சியாளர்கள் இவைகளில் ஒன்றுக்குக்கூட விளக்கம் தரமுடியாத நிலையில் உள்ளனர். இவைகளைப் பற்றி விஞ்ஞானத்திஞல் விளக்கம் தர இயலாததால் இவைகள் விஞ்ஞானத்தில் தோல்விகள் என்றும் சிலர் கருதக் கூடும். ஆனுல் ஆராய்ச்சியாளர் ஆயிரக் கணக்கில் இது மாதிரி விஷயங்களை ஆராய்ச்சி செய்து கீழ்க் காணும் முடிவிற்கு வந்துள்ளனர். இவைகளைப் பற்றி நம்மால் ஒன்றும் கூற முடியாத நிலையில் உள்ளோம். இன்று நமக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனுல் இவைகளைப் பற்றி விளக்கங்களை ஒரு நாள் அறிந்து கொள்ளுவோம்.

"எல்லாம் வல்ல அல்லாஹ் ஒருவனுக்கே வெளிச்சம்." இதைத் தான் நம்மால் கூற முடியும்.

முற்றிற்று.




# அழகு ராணி-ஹுஸ்ன் ஆரா

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

## [6]

அதற்கந்த பூதம், "மனிதனே, உன்னை இச்சிறையிலிருந்து விடுவிக்க எனக்கு, சக்தி இல்லை. ஆனால், இந்தச் சிறையை நான் தூக்கிக் கொண்டு போய், என் எஜமானியிடம் போடுகிறேன். அவள் உன்னை விடுதலை செய்வாள்" என்று சொல்லி மறைந்தது.

உடனே அந்தச் சிறைசாலையே ஆகாசத்தில் பறப்பது போல் தென்பட்டது இளவரசன் ஹஸன் பாஷாவுக்கு. சிறிது நேரத்தில் அந்த ஓட்டம் நின்றது. அப்போது சிறைக் கதவு திறந்து கொண்டது. அதனுள் அந்தப் பரீ, சிரித்த வண்ணம் உள்ளே நுழைந்து வந்து, "வாலிபனே, சிறையை விட்டு வெளியே வரலாம்" என்று சொன்னாள். இளவரசன் வெளியே வந்து பார்த்தான். அது ஒரு சேறு நிறைந்த ஈர நிலமாக இருந்தது. அது ஒரு புது இடமாகவும், இருந்தது.

பிறகு அந்தப் பரீ, தன் ஏவலாளான பூதத்தைப் பார்த்து, "இந்தச் சிறைசாலையை இருந்த இடத்திலேயே கொண்டு போய் போட்டு விடு" என்று கட்டளை யிட்டாள்.

அப்போது அந்தப் பூதம், அச்சிறைக் கூடத்தை அப்படியே அலக்காக தூக்கி ஒரு பெட்டியை எடுத்துக் கொண்டு போவது போல் சென்று மறைந்தது.

பிறகு அந்தப் பரீ, இளவரசனை நோக்கி, "இப்போது உனக்கு என்ன வேண்டும், எம்மாதிரி உதவி வேண்டும்?" என்று கேட்டாள்.

அதற்கு இளவரசன், "அற்புதக் கன்னியே, ஸஹர் தேச இளவரசன் தன்னுடைய கலியாணத்துக்காக ஓர் அதிசயமான அரிய உடையைத் தைத்து வைத்திருக்கிறானாம். அது எனக்கு வேண்டும். எந்த வகையாலேனும் நீ அதை எனக்குக் கொடுத்துதவ வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

இதைக் கேட்டு, வியப்படைந்த அந்தப் பரீ சொன்னதாவது:— "ஓ, அதுவா! ஸஹர் தேசத்து இளவரசனை மணந்து கொள்ளப் போகும் ஸிமன் பரீ என்னும் கன்னி, இரு பூதங்களுடைய பாது காப்பில், பல ஆட்களை வேலைக்கு வைத்து, இரண்டு வருஷமாக ஓர் அற்புத உடை தைத்துக் கொண்டிருக்கிறாள், இந்தத் தையல் வேலை நாளைக்கு முடி வடைந்து விடும். பிறகு அதை அவள் தன் மணாளனுக்கு அனுப்பி வைப்பாள். அதை இன்று பார்ப்பதற்காக ஸஹர் நாட்டு இளவரசன் வரப் போகிறான். அவன் வந்து பார்த்து விட்டுப் போகட்டும். அதன்பின் நான், அங்குள்ள எனது தோழி ஒருவளுடைய உதவி கொண்டு, எப்படியாவது அந்த அற்புத உடையை உனக்காக கொண்டு வந்து விட முயற்சிக் கிறேன். இதில் உனக்கு அதிருஷ்ட மிருந்தால், கிடைத்து விட லாம். எதற்கும் பொறுத்திரு" என்று சொல்லி விட்டு, 'சரி இப் போதே நான் இங்கு எனது அந்தத் தோழியை வர வழைக் கிறேன் பார்," என்று சொல்லி, தன்னுடைய தலை மயிர் கூந்தல் கட்டை அவிழ்த்து உதறினாள்.

மூன்று தரம் ஏதோ ஓதி மந்திரம்செய்தாள். என்ன ஆச்சரியம்! ஏழு சமுத்திரத்துக்கு அப்பால் இருக் கும் அந்த அப்சரக்கன்னி (தோழி) தோன்றினாள். எப்படி யெனின், வானத்திலிருந்து ஒரு சிம்மாசனம் இறங்கி தரைக்கு வந்தது. அதில் அவள் சொகுசாக உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

அந்த விநோதப்பரி, இந்தப் பரிக்கு ஸலாம் செய்தாள். இவள் பதில் ஸலாம் செய்தாள். "சகோதரி, நீ என்னை அழைத்த காரணம் என்ன?" என்று அவள் கேட்டாள். அதற்கு இவள், "தங்கையே, ஸஹர் தேச இளவரசனுடைய கலியாணத்துக்காக தயா ராகி யிருக்கும் அற்புத உடையை நீ எப்படியாவது, இந்த உத்தம வாலிபனுக்காக கொண்டு வந்து கொடுக்க வேண்டும். மனிதர்கள் நம் இனத்தை விடச் சிறந்தவர்கள். இவர்களுக்கு ஊழியம் செய்ய வேண்டியது நமது கடமை. ஆகவே நீ எப்படியாவது இதற்கு உதவ வேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள்.

அதற்கு அவள், சற்று கோபித்துக் கொண்டவளாகி, "ஒரு மனிதனுக்காக நான் என் உயிரை ஆபத்தில் போட்டுக் கொள் வதா?" என்றாள்.

"அப்படியானால் நீ என்னுடைய தோழி யில்லையா? உனக்கு ஒன்றும் ஆபத்து வராது. நான் துணை செய்கிறேன். மேலும் நான் இந்த வாலிபருக்கு 'வாக்குறுதி' செய்து கொடுத்து விட்டேன். இதை நாம் நிறைவேற்றியாக வேண்டும்" என்று வற்புறுத்தினாள்.

'வாக்குறுதி' என்ற சொல்லைக் கேட்டதும், அவள் கோபம் போய் விட்டது. மலர்ந்த முகத்துடன் இணங்

கினள். உடனே அவள், தன்னுடைய மடியிலிருந்து ஒரு புஷ்பத்தை எடுத்து அதைத் தன் தலை மீது வைத்துக் கொண்டு, என்னமோ மந்திரம் ஓதினள். உடனே அவள் மறைந்து விட்டாள்.

*   *   *   *

'இப்படி ஒரு நாழிகை நேரம் கழிந்தது. மீண்டும் அந்த அற்புதப் பரீ, ஒரு புது சிம்மாசனத்தோடு எதிரில் தோன்றினள். வந்தவள், நம் இளவரசனை நோக்கி "வா, என்னுடன் இந்த சிம்மாசனத்தில் அமர்ந்து கொள்" என்று சொன்னள். அப்படியே இளவரசன் அவளுடன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டான். இருவரும் ஆகாயத்தில் மறைந்து விட்டனர்.

அந்த அற்புதப் பரீ, ஆகாயத்தில் போய்க் கொண்டே, இளவரசனை நோக்கி, "வாலிப அழகனே, நான் அந்த அற்புதமான உடையைக் கொண்டு வந்து விட்டேன். அதை உன்னிடம் கொடுப்பது முறையல்ல. நீ முதலில் எனக்கு, நீ மணந்து கொள்ளப் போகும் இராஜ குமாரியைக் காட்டு; அவளை நான் கண்ட பின், இதை அவளிடமே சன்மானமாகத் தருகிறேன்" என்று நிபந்தனை யிட்டுக் கூறினள்.

இந்த விநோத வேண்டுகோளுக்கும் இளவரசன் ஹஸன் பாஷா இணங்க வேண்டியதாயிற்று. "சரி, அந்தப் பக்கம் போகட்டும்......அதோ தெரிகிறதே மாளிகை, அந்த மாளிகையில் ஆறுவது மாடியில் அந்த அழகு ராணி ஹுஸ்ன் ஆரா அமர்ந்திருக்கிருள். அங்கு போவோம்" என்ருன்.

அவ்விதமே இருவரும் அங்கு போய்ச் சேர்ந்தனர். இந்த அற்புதப் பரீ-ஒரு அப்ஸரக் கன்னியாக இருந்தும், ஹுஸ்ன் ஆராவைக் கண்டதும் மதி கலங்கிப் போனள். மனிதர் இனத்திலும் இவ்வளவு அழகான பெண் உண்டா என்று வியப்படைந்தாள்.

அழகுராணி ஹுஸ்ன்ஆரா, தன்னுடைய காதலனகிய ஹஸன் பாஷாவுடன் வேறொரு பெண்ணும் வந்து இறங்கியதைப் பார்த்துத் திடுக்கிட்டாள். தன்னை மணப்பதற்கு வந்த இவன் வேறொருத்தியை மணந்து கொண்டு வந்து விட்டானே என்று திக்பிரமையடைந்தாள். இதை நுண் அறிவினல் அறிந்து கொண்ட இளவரசன், அழகு ராணி ஹுஸ்ன் ஆராவைப் பார்த்து "இவள் தான், உன்னுடைய மூன்ருவது நிபந்தனையாகிய—ஸஹர் தேச இளவரசனின் கலியாண உடையைக் கொண்டு வந்து கொடுக்க பேருதவி புரிந்த பரீ. இவள் நம் இனத்தைச் சேர்ந்தவளல்ல. இவள் அந்த உடையை உன்னிடமே கொடுப்பதற்காக கொண்டு

வந்திருக்கிருள்" என்று சமாதானம் சொன்னுன். இந்த அற்புதப் பரீ, தான் கொண்டு வந்திருந்த அற்புதமான மாப்பிள்ளை உடையை, அழகுராணியுடைய மடியில் வைத்து, "இதோ உனக்கு உரிய சன்மானம்" என்று சொல்லிவிட்டு மறைந்து போய் விட்டாள்.

அந்த அற்புத உடையானது ஜெகஜ் ஜோதியாய் இலங்கிக் கொண்டிருந்தது. கிடைத்தற்கரிய பொருள் கிடைத்ததற்காக, இளவரசன் ஹஸன் பாஷாவும், அழகுராணி ஹுஸ்ன் ஆராவும் மட்டில்லா மனமகிழ்ச்சி யடைந்தனர்.

* * *

மறு நாள் பொழுது விடிந்தது. அரசர்க்குச் சமாச்சாரம் தெரிவித்தாள் இளவரசி. அரசர், மனம் பூரித்துப் பெருமிதம் அடைந்தார். உடனே தர்பார் கூடியது. மந்திரிப் பிரதானிகளை அழைத்து, இனி யில்லாத வண்ணம் மகத்தான விதமாக கலியாணம் நடத்த ஏற்பாடு செய்யும்படி ஆக்ஞை யிட்டார். அவ்வாறே ஏற்பாடு நடந்து எல்லா அரசர்களும், விருந்தினர்களும், அதிபதிகளும், அன்பர்களும் வந்திருக்க, அழகுராணி ஹுஸ்ன் ஆராவுக்கும் வீர இளவரசன் ஹஸன் பாஷாவுக்கும், நிக்காஹ் என்னும் திருமணம் நிறைவேறி முற்றுப் பெற்றது.

நெடுநாள் காத்துக் கிடந்த காதலர்கள், மணவதியாகவும் மணவாளனுகவும் மாறினர். மணவறையில் இருவரும் தனித்திருந்து, மனமும் உடலும் உயிரும் ஒன்று கலந்தமைப் போல், கலந்து உறைந்து உவந்து இன்பம் அடைந்தனர்.

கலியாண வைபவம் இனிது முடிவடைந்தும், நாடெங்கும் நகரெங்கும் கோலாகலக் கொண்டாட்டங்கள் தொடர்ந்து ஒரு மாதம் வரை நிகழ்ந்து கொண்டே இருந்தது. ஊரெங்கும் விருந்தும் சந்தோஷமும் தாண்டவ மாடியது.

* * * *

கலியாணம் நிகழ்ந்து முடிந்து ஆறு மாதங்களாகி விட்டன. ஒரு நாள் இளவரசன், அரசரை யணுகி, "நான் வந்த வேலை முடிவடைந்து விட்டது. தங்களுடைய நாட்டமும் நிறைவேறி விட்டது. தங்கள் குமாரியின் அபிலாஷையும் நிறை வெய்திவிட்டது. இனி நான் என் சொந்த நாட்டுக்குப் போக வேண்டும். என்னை என் மனைவியோடு, என் ஊருக்கு மனமொப்பி அனுப்பி வையுங்கள்" என்று கேட்டுக் கொண்டான்.

அதற்கு அரசர் முற்றும் இணங்கி, "இனி எப்போது வேண்டுமானுலும் உன் மனைவி ஹுஸ்னு ஆராவை கூடவே அழைத்துக்

கொண்டு போகலாம். ஹுஸ்னு ஆராவுடைய மாளிகையிலுள்ள அலங்கார ஆடம்பர சாமான்களெல்லாம் உங்களுக் குடையதே; வேண்டுமானல் அவைகளையும் எடுத்துப் போகலாம்; இன்னும் என்னுடைய உடைமைகளில் எது வேண்டு மானுலும் கேட்டு வாங்கிப் போகலாம்'' என்று சொல்லி ஆசீர்வதித்து துஆ செய்து அனுப்பிவைத்தார்.

* * * *

கணவனும் மனைவியுமாகிய இளவரசனும் இளவரசியும், ஊருக்குப் புறப்படுவதற்காக ஆயத்தமாயினர். இளவரசன், தன்னிடமுள்ள பரீயின் மயிர் இழையை எடுத்து அதற்கு வெளிச்சம் காட்டினன் ஒரு பூதம் தோன்றியது. இளவரசன் அந்த பூதத்துக்குக் கட்டளை யிட்டான். அந்த பூதம், இளவரசி ஹுஸ்னு ஆராவின் மாளிகை யோடு இவர்களையும் தூக்கிக் கொண்டு, அந்தரத்தில் சென்று சிறிது நேரத்தில் இளவரசனின் ஊரில் கொண்டு போய் விட்டு வைத்தது.

இளவரசன் ஹஸன் பாஷா, தன் ஊர் போய்ச் சேர்ந்ததும், தன்னுடைய அண்ணன்மார்களும் அண்ணிமார்களும் தங்கியிருக்கும் அரண்மனையுள் சென்று, எல்லோருக்கும் சலாம் செய்து, தன்னுடன் அழைத்து வந்துள்ள அழகுராணி ஹுஸ்னு ஆராவையும் ஸலாம் செய்யச் சொன்னன்.

அண்ணன்மார்—அண்ணிமார் எல்லோரும், தம்பி ஹஸன் பாஷாவின் தைரியத்தையும் ஊக்கத்தையும், எடுத்த காரியத்தைச் செய்து முடித்த தீரத்தையும் கண்டு வியப்படைந்தனர்.

இளவரசனின் சின்ன அண்ணிதான், ஹுஸ்னு ஆராவைப் பற்றியும் இளவரசனைப் பற்றியும் ஏளனமாகப் பேசியவள். அவள் தன் அறியாமைக்கும் துடுக்குப் பேச்சுக்கும் வருந்தி மன்னிப்பு கேட்டுக் கொண்டாள்.

* * * *

சிறுவர்களே, இந்தக் கதையில் தெரியவரும் படிப்பினை யாதெனில்: யாரைப் பற்றியும் எதைப் பற்றியும் ஏ ள ன மா க ப் பேசக் கூடாது.

வாலிபர் மனம் வைத்தால் எந்தக் காரியத்தையும் வெற்றிகரமாகவும் இதமாகவும் மங்களமாகவும் முடிக்கலாம் என்பதேயாகும். பொங்கும் மங்களம் எங்கும் தங்குக. வஸ்ஸலாம்

முற்றிற்று:

ஸீரத்துல் குப்ரு வென்னும்

# கதீஜா நாயகி (ரலி)

# ஜீவிய சரித்திரம்

இச்சரித்திரமானது எஜமானியாக ஏற்று பின்பற்றத் தக்க நாயகியான மஹா சங்கை பொருந்திய நபி பெருமாட்டியின் ஜீவவிருத்தாந்தமாகும். இம்மங்கையர் தமது வடிவாம்சங்களில் உலகப் பெண்கள் எல்லாரினும் மீக்குற்றவர், அன்றியும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய நம்பிராட்டிகள் எல்லாரினும் பிரதமமானவர் என்ற பெருமை அவருக்கு வாய்த்திருந்தது. அவரது வாழ்க்கை சம்மந்தமான இந்த சரித்திரம் அனைவரும் படித்து அனுஷ்டிக்கத்தக்கதா யிருக்கிறது.

இதில் கதீஜா நாயகியின் வமிச பரம்பரையும், முதற் கலியாணங்களும் அவர்களின் வர்த்தகச் செல்வமும், றஸூல் நாயகம் (ஸல்) ஷாம், மிஸ்ர் தேசங்களுக்கு யாத்திரை போய் வந்ததும், கதீஜா பெருமாட்டிக்கும் நபிகள் பெருமானுருக்கும் திருக் கலியாணம் முடிந்ததும் கதீஜா பெருமாட்டி தமது உரிமையைக் கணவருக்கு அர்பணஞ் செய்ததும், நபி பெருமானுருக்கு வஹி இறங்குதல், நபிபட்டந் தரித்தல், நபிகள் பெருமானுருக்கு கதீஜா பெருமாட்டியின் உதவி, கதீஜா பெருமாட்டியின் மௌத் முதலியவைகளடங்கி யிருக்கின்றன. இச்சரிதையில் நம் முஸ்லிம் சகோதர சகோதரிகளுக்கு அளவற்ற போதனைகள் நிறைந்திருக்கின்றன.

கிளேஸ் காகிதம் இதன் விலை ரூ. 1–32

ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 2–12

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# ஷோபா தேவி

தொடர் நாவல்

"ஏ. ஆர். கமால்"

## முன்னுரை

நூற்றுக் கணக்கான பெண்களுடன் பழகியுள்ள ஆண்கூட பெண் ஒரு 'புதிர்' என்றே கூறுகிறான். செவ்வாய் மண்டலத்திலும் சந்திர மண்டலத்திலும் தன் ஆதிக்கத்தைச் செலுத்த முற்படும் மனிதன் இதுகாறும் பெண் என்னும் புதிர் மண்டலத்தின் மீது ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கவில்லை. முயற்சித்த பல மேதாவி களும் அதில் தோல்வியே கண்டு இருக்கின்றனர்.

கள்ளர், வேடர், மதயானை மற்றும் பல கொடுமைகள் புரியும் ஜீவராசிகளை நம்பினாலும் சேலை கட்டிய சிங்காரியை நம்ப வேண டாம் என்று பெண் இனத்தையே சேர்ந்த 'ஔவை' பிராட்டி அன்று பாடியது இன்று வரை பொய்யாகாமலே இருக்கிறது.

'கொலையும் செய்வாள் பத்தினி' என்பது தவறு. கொலையும் செய்வாள் காதகி அல்லது காரிகை என்று சொல்வதே சிறப்பு. உண்மையில் பத்தினியாக இருந்தால், தன் கணவனைக் கொலை செய்வதற்கு மாறாக தன் உயிரைக் கொடுத்தாகிலும் பதியின் உயிரை மீட்பாள். கொலை செய்யும் காதகி பத்தினியாக முடியுமா? உற்ற துணைக்கு உறு துணையாக வாழ் நாள் முழுதும் இணைந்து இருப்பதாக உறுதி பெருக்கோடு ஒருவனின் கையைப் பிடிக்கும் காரிகை, கொலை செய்ய முற்படுகிறாள் என்றால் இதற்குப் பெரும் பாலான காரணம் கள்ளத் தொடர்பே அன்றி வேறில்லை. இவ் விதமான சம்பவம் சாதாரண ஒரு மனிதன் வாழ்வில் ஏற்பட்டால் கடலில் விழுந்த ஒரு சிறு துளிபோல் ஒரு சில நாளில் அல்லது அக்கணமே கூட மறைந்து போகும். ஆனால் இதே சம்பவம் ஒரு அரசன் வாழ்வில் ஏற்பட்டு விட்டால், அச்சம்பவம் சரித்திரச் செடியாக முளைத்து விடும். அச் செடி இறுதி நாள்வரை காயா மலும் கருகாமலும் இருக்க, வாழையடி வாழையாக வருங்கால மக்களுக்கு வரலாறைச் சொல்லிக் கொண்டிருக்க, எழுத்தாளர்களின் பேனாவில் உள்ள 'மை'யே தண்ணீராகவும். எருவாகவும் இருக் கின்றன.

தமிழ் நாட்டில் தொன்று தொட்டு நாட்களில் இருந்து வரும் பழ மொழிகளிலே "ஆகுவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால்"

என்பதும் ஒன்று. பல மொழிகள் பொய்யானலும் இந்தப் பழமொழிமட்டும் பொய்யாகவில்லை என்பதை மானிலம் நன்கு அறியும். இக்காலையிலும் எத்தனையோ குடும்பங்கள் ஆகியும் வருகின்றன. அழிந்தும் வருகின்றன. ஆக்கும் தன்மை கொண்ட ஆரணங்கு அதிருஷ்ட வசமாக எவனுக்கு மனைவியாகிருளோ, அவனுக்கு இவ்வுலகம் கூட சுவர்க்கமாகத்தான் இருக்கும்.

இறுதியாக "ஷோபா தேவி" என்னும் இக்காவல் ஆருவது நூற்ருண்டை ஒட்டியது. 'கொலையும் செய்வாள் காரிகை' என்னும் பொய்யா மொழிக்கும், 'ஆகுவதும் பெண்ணுல் அழிவதும் பெண்ணுல்' என்னும் பழமொழிக்கும் இந்த ஷோபா தேவி என்னும் மஹாராணி அழியா புகழ் பெற்ற ஒரு சான்று. சிந்து சாம் ராஜ்ய இச்சரித்திர சுவட்டை, காவல் ரூபத்தில் படைத்து இருக்கிறேன்.

மேல் விஷாரம்
1–7–1961

இங்ஙனம்
ஏ. ஆர். கமால்

# 1

சிந்து மன்னன் 'சாஹஸீ' நீதி நெறி தவருமல் ஜாதி மத பேத மின்றி ஆட்சி செலுத்தி வந்தான். நாட்டு மக்கள் நிம்மதியுடன் ஒருவருக் கொருவர் சகோதர பாசத்தோடு ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தார்கள். மன்னன் சாஹஸியின் சர்வாதிகார மற்ற சத்திய சீரிய ஆட்சியைப் பற்றி நாட்டு மக்கள் புகழ்ந்தும் போற்றியும் பாராட்டிய வண்ணம் பரவசத்துடன் இருந்தனர்.

மன்னுயிரைத் தன்னுயிராகக் காத்து நாட்டு மக்களுக்கு யாதொரு குறைவு மில்லாமல் ஆட்சி புரியும் மன்னன் சாஹஸி மனதில் மட்டும் ஒரு குறை எங்கோமூம் இருந்து கொண்டே இருந்தது. 'தனக்குச் சந்தான பாக்கியமில்லையே!' என்பது தான் மன்னனின் குறை.

அரசன் என்ற அகங்காரத்தாலும் அதிகார ஆணவத்தாலும் ஆயிரக்கணக்கான ஆரணங்குகளை அதிகார வேட்கையால் ஆட்கொண்டு, தன் சயன அறை சிங்காரிகளாக பலருடன் சல்லாபித்து சிலரைத் தன் சகதர்மணிகளாகவும் ஏற்றுக் கொண்டு சிற்றின் பத்திலே சில மன்னர்கள் மூழ்கி இருந்தனர் என சரித்திரங்கள் சான்று பகர்கின்றன. ஆனல் சிந்து மன்னன் சாஹஸி அந்த நெறி கெட்ட மன்னர்களுக் கெல்லாம் நேர் விரோதமாக, வருங்கால மன்னர்களுக்கு ஓர் முன் மாதிரியாக தன் மதாச் சாரப்படி ஒரு மங்கையை மணந்து ஒரே மனைவியுடன் இல்லறம் நடத்தினன்.

அவனுக்குச் சகதர்மணியான அந்த சிந்தாமணியும் பதியின் பாதமே பத்தினிக்குச் சொர்க்கம் என்ற சத்திய வாக்கிற்குச் சென்னி தாழ்த்தி தூய உள்ளத்தோடு சிவ பக்தியோடு பதி பக்தியை மேற்கொண்டு மங்கை குலத்துக் கோர் மங்கா மாணிக்கமாக திகழ்ந்து வந்தாள்.

'தன்னால் தான் மன்னனுக்கு ஒரு மகனைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை. தான் மரணமாகி விட்டாலாகிலும், மன்னன் வேறு ஒரு மங்கையை மணந்து அவள் மாரலாக வாகிலும் ஒரு மகனைப் பெற்றுக் கொள்ளட்டும்' என்ற தோறணையில் இல்வாழ்வில் ஈடுபட்ட ஒரு சில வருடங்களிலே அவ்வுத்தமியான பத்தினி நிறை மனதோடு மானிலத்தைத் துறந்து மீளா துயில் கொண்டு விட்டாள்.

சில மாதங்களுக்குப் பின் மன்னன் சாஹஸி மறுமணம் புரிந்து கொண்டான. முதல் மனைவி பாசமே உருவாகி பரந்த மனமுடையவளாக பிற பாவைகளுக்கோர் முன்மாதிரியான பது மணியாக திகழ்ந்திருந்தாள் என்றால் இரண்டாம் மனைவியான இவள் சித்தினி என்னும் சத்திய தேவியாக சாந்த குணமுள்ள சற்குணவதியாக சிறந்து விளங்கினாள். அதோடு ராஜாங்க விஷயத்திலும் தலையிட்டு அரசனுக்குப் போதிய உதவிகளும் செய்து வந்தாள். இவளுடைய தீர்க்கதரிசனத் தன்மையைக் கண்டு மந்திரி பிரதானிகளும் வியப்பிலும் மகிழ்ச்சிலும் மூழ்கினர்.

அழகிருந்தால் அன்பு இருக்காது. அன்பு இருந்தால் அறிவு இருக்காது. அழகு, அன்பு, அறிவு இம்மூன்றும் இருந்து விட்டால் அவர்களுக்குப் போதிய ஆயுள் இருக்காது. இது இயற்கையின் இயல்பு. அப்படியும் ஒரு சிலர் எல்லாத் தன்மைகளையும் ஒருங்கே பெற்று ஆயுளும் நீள முள்ளவராக இருந்தால் அது மானில மக்களின் பாக்கியமே!

ஆனால், சிந்து சாம்ராஜ்ய மன்னன் சாஹ்.ஸியின் இரண்டாம் மனைவியிடம் அழகு, அன்பு, அறிவு மூன்றும் இருந்தன. நீண்ட ஆயுள்தான் இல்லாமல் போய் விட்டது. முதல் மனைவி போலவே இவளும் சந்தான பாக்கியமற்று இல்வாழ்வில் ஈடுபட்ட ஒரு சில வருடங்களே தனக்குப் போது மென்ற நிறை மனதோடு மண்டையை போட்டு விட்டாள். இவளுடைய மரணச் செய்தியைக் கேட்டு அக்நாடே துக்கத்தில் மூழ்கி விட்டது என்றால் மிகையாது.

'குழந்தை இம்மானிலத்தில் உதிக்கும் தருணமே 'மரணம்' என்ற மலை அதன் தலைமீது கொடையாகி நின்று விடுகிறது. கால வரையின்றி யாரையும் எதையும் பொருட்படுத்தாமல் எப்போது வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் ஒரு கண நேரத்தில் அந்த மரண மலை தலைமேல் இடிந்து விழுந்து மீளா துயில்

கொள்ள செய்து விடும்' என்ற சத்திய நிகழ்ச்சியின் மீது விசுவாசம் கொண்டவனுகையால் மன்னன் சாஹஸி தன் இரு மனைவிகள் மரண மானதைப் பற்றியும் அதிக வருத்தப்பட வில்லை. ஆனுல் இரு மனைவியர்களில் ஒருவளுக்குக் கூட குழந்தை பேறு ஏற்பட வில்லையே என்று தான் அதிகக் கவலை கொண்டான்.

'அரசனுக்குப் பின் இந்த அரச பாரத்தைச் சுமக்க அவனுக்கு ஒரு பிள்ளை பிறக்க வில்லையே!' என்றுதான் அந்நாட்டு மக்கள் அனைவரும் ஏக்கம் கொண்டனர்.

ஆகவே, இரண்டாம் மனைவி மரணமானபின் மன்னன் மூன்றும் மணம் புரிந்து கொள்வான் என மந்திரி பிரதாணிகள் உள்பட மக்கள் அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனுல் இரண்டாம் மனைவி இறந்து ஆண்டுகள் ஐந்தாகியும் மன்னன் சாஹஸீ மூன்றும் மணம் புரிந்து கொள்ள முயற்சிக்க வில்லை. எதிர்பார்த்திருந்த அனைவரும் ஏமாற்ற மடைந்தனர்.

'உண்மையில் தனக்குச் சந்தான பாக்கியம் ஆண்டவன் கொடுத்திருந்தால் காலஞ் சென்ற இரு காரிகைகளில் எவள் மூலமாக யாகிலும் ஏற்பட்டு இருக்காதா? கப்பாசையின் பயனுக மூன்றும் மணம் புரிந்து அவள் மாரலாகவும் பிள்ளை பேறு இல்லை என்ருல் என்ன செய்வது? மேலும் வயதென்னும் ஐம்பதாம் படியை நெருங்கிக் கொண்டிருக்கும் தனக்கு மூன்றும் கல்யாணம் அவசியமா?' இவ்விதமான எண்ணங்களை முன்னிட்டுத் தான் சாஹஸீ மூன்றும் கல்யாணத்திற்கு முயற்சி செய்யாமல் வாளா இருந்து விட்டான்.

மானிடனின் சக்திக்கும் அப்பாற்பட்ட ஒரு சக்தி! 'அனைத்தையும் அறிந்து விட்டோம்' என்று ஆணவங்கொள்ளும் அறிஞர்களின் அறிவிலும் அடங்காத ஒரு சக்தி!! கண்ணுக்கும் கருத்துக்கும் கற்பனைக்கும் எட்டாத எட்ட முடியாத ஒரு சக்தி!!! 'உண்டு' என்ருல் அது ஆண்டவனின் சக்தியே அன்றி வேறில்லை. இதே சக்தியைத் தான் சிலர் 'தலை விதி' என்றும் கூறுகின்றனர்.

இந்த விதி என்னும் சக்திதான் மன்னன் சாஹஸியின் வாழ்வில் குறுக்கிட்டு விளையாடியது. 'மூன்றும் மணம் அறவே கூடாது' என்று இறுதியாக உறுதி பூண்டிருந்த அவன் உள்ளத்தில் சபலத்தை ஏற்படுத்தி சதி செய்யத் தொடங்கிற்று.

வழக்கப்படி ஒரு நாள் குதிரை மீது ஊர்வலம் வந்து கொண்டிருந்தான் மன்னன் சாஹஸீ. அப்படி வலம் வரும்போது தண்ணீர் குடத்தை ஒயிலாக தூக்கிக் கொண்டு அன்ன நடை நடந்த வண்ணம் ஆற்றை நோக்கிச் செல்லும் ஒரு அப்சரஸை, பதினறு வயதே பூர்த்தியான ஒரு பதுமையை, சந்திர வதனம் கொண்ட சுந்தரியை அவன் கண்கள் ஊடுருவிப் பார்த்தன.

(தொடரும்)

# திருக் குர்ஆன் : : : : : : : : சார சங்கிரஹம்

## பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

### உண்மை சாக்ஷியம் உரைக்க வேண்டும்.

(முஸ்லிம்களே, உண்மை) சாக்ஷியத்தை நீங்கள் ஒரு போதும் மறைக்க வேண்டாம். எவனேனும் சாக்ஷியத்தை மறைப்பானுனல் அவனுடைய மனம் பாவத்தில் சிக்கிவிடும். நீங்கள் என்ன செய்த போதிலும் (என்ன கூறிய போதிலும்) அதை, அல்லாஹ் (தஆலா) நன்கறிந்தவனுக இருக்கிருன். (எனவே வழக்கு விசாரணைகளில் உண்மையை மறைத்துப் பொய் சாக்ஷியம் கூருதீர்கள்.)

(ஜுஸு: தில்கர்ருஸுலு, ஸூரா: அல்பகரா: ருகூ: 38)

### பாவிகள் அல்லாஹ் இடம் மன்னிப்பு கோர வேண்டும்.

யாரேனு மொருவர் (அறிந்தோ, அறியாமலோ) ஏதேனும் பாப காரியம் செய்து விட்டால், அல்லது தனக்கே கேடாக ஏதேனும் பாதகம் செய்து கொண்டால், அவர் அல்லாஹ்வை அதிகம் தியானித்து வருந்துவாராக. இன்னும் அவர் தன் பாவங்களுக்கு (அல்லாஹ் இடம்) பாப மன்னிப்பு கோருவாராக. நிச்சயமாக அல்லாஹு (தஆலா) அன்னவருடைய பாவத்தை மன்னிக்கப் போதுமானவனுக இருக்கிருன். மேலும் ஒருவர், பாப காரியம் செய்து விட்டால், (அதற்காக தலை குனிந்து வருந்த வேண்டும்; அதை விட்டு) வீண் விதண்டாவாதம் செய்து கொண்டிருக்கக் கூடாது.

(ஜுஸு: லன்தனு; ஸூரா: ஆலஇம்ரான்; ருகூ: 14)

### பாபங்களை விட்டும் பேணிக் கொள்ளுங்கள்.

தகாத (பாப) காரியங்களைச் செய்யக் கூடாதென்று உங்களுக்குக் கட்டளையிடப்பட்டிருக்கிறது; (நீங்கள் விலக்கப் பட்டிருக்கிறீர்கள்.) எனவே, நீங்கள் அச்செயல்களில் (ஜாக்கிரதையாக இருந்து), பெரிய பாவங்களை விட்டும் பேணி நடந்து கொள்வீர்களாக. இப்படிச் செய்தால், உங்களின் சின்னச் சின்ன பாவங்களை (அல்லாஹு தஆலா) உங்கள் அனுஷ்டானப் பட்டியலிலிருந்து நீக்கி (மன்னித்து) விடுவான். மேலும் கியாமத்து நாளில் இதற்

187085

காக உங்களுக்குக் கௌரவமும் அளித்து உங்களைச் சுவர்க்கத்தில் புகவைப்பான்.

(ஜுஸுவு: வல்முஹ்ஸினுத்; ஸூரா; அந்நிஸா; ருகூ: 5)

## பாவிகளுக்கும் பாவ மன்னிப்பு உண்டு.

யாரேனு மொருவன் பாபமான (கெட்ட) காரியம் செய்தால், அல்லது தன் ஆத்மாவுக்கே அக்கிரமம் செய்து கொண்டால், (பிறகு வருந்தி) அல்லாஹ் (தஆலா) இடம் தன்னுடைய பாவத்தை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டால், அல்லாஹ் (தஆலா) மிகவும் மன்னிப்பவனுகவும் அருள் உடையவனுகவும் இருக்கின்றுன். (எனவே எப்படிப்பட்ட பாவிகளுக்கும் பாவ மன்னிப்பு உண்டு.)

(ஜுஸுவு: வல்முஹ்ஸினுத்; ஸூரா: நிஸா; ருகூ: 16)

## எப்போதும் நியாயத்தை நிலை நிறுத்துங்கள்.

ஈமான் கொண்ட (முஸ்லிமான)வர்களே, நியாயத்தையே (எவ்விஷயத்திற்கும்) உறுதியாய் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். (வம்பு வழக்குகளில்) அல்லாஹ்வுக்குப் பொருத்தியதான வகையில் சாக்ஷியம் கூறுங்கள். இந்த சாக்ஷியம், உங்களுக்கும் உங்கள் தாய் தந்தைக்கும் உங்கள் சுற்றத்தார்களுக்கும் விரோதமாக இருந்தாலும் சரியே. நீங்கள் (உண்மைக்கு) சாக்ஷியம் சொல்லும் போது, யார் பணக்காரர்—யார் ஏழை என்பதை மறந்து விடுங்கள். அல்லாஹ் (தஆலா) இந்த இரண்டு வகையினருக்குமே போஷகனுக இருந்து வருகிறுன். எனவே நீங்கள் (நியாயத்தை நிலை நிறுத்தும் வகையில்) சுயநலத்துக்குக் கீழ்ப்படிந்து விடாதீர்கள்; சத்தியத்தை விட்டு நழுவிச் சென்று விடாதீர்கள். இது உங்கள் மீது கடமையாகும். எனவே, நீங்கள் யாருக்கேனும் பயந்து கொண்டோ, யாருக்கேனும் தாக்ஷண்யப்பட்டு (ஏறுக்கு மாருக) சாக்ஷியம் கூறுவீர்களானுல், (நீங்கள் பாவியாவீர்கள்), அல்லாஹ் (தஆலா) உங்களுடைய இந்த துற்செயல்களை யெல்லாம் நன்கு நோட்டமிட்டுக் கொண்டு தான் இருக்கிறுன். (எனவே பணத்துக்கும் அச்சத்துக்கும் பணிந்து உண்மையை விட்டுக் கொடுக்கக் கூடாது)

(ஜுஸுவு: வல்முஹ்ஸினுத்; ஸூரா: அந்நிஸா, ருகூ: 20)

## எந்த மாமிசம் ஹராம்? எது ஹலால்?

(செத்துப் போன பிராணியாகிய) பிணத்தின் மாமிசமும், (வழியும்) இரத்தமும், பன்றியின் (நாற்ற) மாமிசமும், அல்லாஹ் உடைய திருப் பெயர் (பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர் என்று) சொல்லப்படாமல் அறுக்கப்பட்ட

(அல்லது வெட்டப்பட்டதன்) மாமிசமும், உங்கள் மீது (உண்ண) ஹராமானவைகளாகும். இன்னும் கழுத்து நெறித்து முறிக்கப்பட்ட பிராணிகளுடைய மாமிசமும், அடிபட்டு (ஜட்கா செய்யப்பட்டு) செத்த பிராணியுடைய மாமிசமும், மேலே யிருந்து கீழே வீழ்ந்து செத்துப் போனதின் மாமிசமும், கொம்பினல் முட்டப்பட்டு செத்ததின் மாமிசமும், கொடிய மிருகங்களால் கொன்று தின்னப் பட்டதன் மாமிசமும் (இவை யாவும், உண்பதற்கு) உங்கள் மீது ஹராமாக்கப்பட் டிருக்கிறது. ஆனல் செத்துப் போவதற்கு முன் (கொஞ்சம் உயிர் இருக்கும் போதே பிஸ்மில்லா சொல்லி) அறுக்கப்பட்டதன் மாமிசத்தைத் தவிர; (இது ஹலாலாகும்.) இன்னும், விக்கிரஹங்களுக்கு முன்னல் பூஜை செய்யப்பட்டு வெட்டப்பட்ட (பலியிடப்பட்ட) பிராணிகளுடையவும், சகுனம் பார்த்து (அதிருஷ்டம் கவனித்து) அம்பு விட்டு வேட்டையாடப்பட்டதன் மாமிசமும் ஹராமாகும். இப்படிச் செய்வது பாபமும் ஆகும்.

முஸ்லிம்களே, (நீங்கள் ஷரீஅத்துடைய ஹுக்முகளை இப்படியெல்லாம் ஸ்பஷ்டமாகக் கூறுவதைக் கொண்டு) காபிர்கள் உங்கள் மீது அவகம்பிக்கை (கோபம்) கொண்டிருக்கிறார்கள். எனவே நீங்கள் அவர்களுக்குப் பயப்பட வேண்டியதில்லை; (அல்லாஹ்வாகிய) எனக்கே பயப்படுங்கள்.

(ஜுஸு: லாயுஹிப்புல்லாஹ்; ஸூரா: அல்மாயிதா; ருகூ: 1)

## நியாயத்தை விட்டும் முகம் திருப்பாதீர்கள்.

ஈமான் கொண்ட (முஸ்லிமான)வர்களே, எந்த சந்தர்ப்பத்திலும், நியாயத்தை யொட்டி (உண்மை) சாக்ஷியம் சொல்வதற்கு (மார் தட்டி நிமிர்ந்து) நில்லுங்கள். ஜனங்களுடைய விரோதம் (குரோதம், கோபம்) உங்களை நியாயத்தை (தர்மத்தை) விட்டும் முகம் திரும்பிப் (புரண்டு) போகச் செய்யா திருக்கட்டும். எனவே எப்போதும் எந்நிலையிலும் நியாயத்தையே பின்பற்றுங்கள். இவ்விஷயங்களில் அல்லாஹ்வுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். நீங்கள் (அந்தரங்கமாகவும், பகிரங்கமாகவும்) செய்யுங் காரியங்களையெல்லாம், அல்லாஹ் (தஆலா) நன்கு அறிகிறவனாக இருக்கிறான்.

(ஜுஸு: லாயுஹிப்புல்லா; ஸூரா: அல்மாயிதா; ருகூ: 2)

## பாபிகளுக்கு மறுமையில் கிடைக்கும் கொடிய தண்டனை

(கியாமத்தாகிய) அந்த (இறுதி) நாளில், பூமியின் அமைப்பு மாற்றப்பட்டு வேறு வகைப் பூமியாகி விடும். இன்னும் வான

(கோள)ங்களும் (பேதகப்பட்டுப் போய் விடும்.) அப்போது, எல்லா ஜனங்களும், ஏக வல்லவனை அல்லாஹ் உடைய (தர்பார்) முன்னிலே (தங்கள் உலகச் செயல்களுக்கு) ஜவாபு சொல்ல (விசாரணைக்காக) கப்ருகளிலிருந்து (எழுப்பப்பட்டு) நிறுத்தப் படுவார்கள். (நபியே,) அந்த (சோதனையான) நாளில், பாவிகளெல்லோரும், (நெருப்புச்) சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு நிறுத்தப் படுவதைப் பார்ப்பீர். உருகும் தீக்குழம்பினால் அவர்கள் (உடை) உடுத்தப்பட்டிருப்பார்கள். அவர்களுடைய முகங்களை நெருப்புத் தணல் பொசுக்கியதாக இருக்கும். எல்லோருக்கும், அவர்களுடைய பாவச் செயல்களுக்குத் தக்கபடி, அல்லாஹ் (தஆலா) அவர்களுக்குத் தண்டனை கொடுப்பான். நிச்சயமாக அல்லாஹு (தஆலா) கணக்கு வாங்குவதில் வல்லவனாக இருக்கிறான்.

(ஜுஸு: வமாஉபர்ரிஉ; ஸூரா: இப்ராஹீம்: ருகூ: 7)


## ஸுபுஹான மௌலூது இனிய தமிழுரை, பாடல்களுடன்

ஸுபுஹான மௌலூது பைத்துகளைத் தமிழில் மொழி பெயர்த்து அந்த மொழி பெயர்ப்பைப் பாடலாக எழுதப்பட்ட கிதாபு இது. ஒரு பக்கத்தில் ஸுபுஹான மௌலூதின் அறபு பைத்துகளும் அதன் எதிர் பக்கம் அந்த பைத்துகளின் பாடல் மொழிப் பெயர்ப்புமாக இருக்கிறது.

யாஸையிதீ, யாகுதுபா, யாஸையிதீ ஷைகீ, லுவ்ஸபில் இலாஹி ஆகிய பைத்துக்களின் தமிழுரைப் பாடல்களுடன் இணைக்கப் பெற்றுள்ளது. கிளேஸ் காகிதம் விலை ரூ. 1–60

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# ஹஜ்ரத் 'க்வாஜா' முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள் ஜீவிய சரிதை.

(டி. எப். ரஹ்மத்துல்லாஹ்—மஆலி சாஹிப் (பாகவி)

## 18—ம் பாகம்

### பிரித்வி ராஜனும் ஷஹாபுத்தீன் கோரியும்

**முன்னுரை**

மெஞ்ஞான சொரூபராகிய காமில் ஒலி ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களுடைய ஆத்மார்த்த வரலாற்றுக்கும், மண்ணை கட்டியாளும் லோகார்த்த மன்னர்களான அஞ்ஞானிகளின் போராட்டங்களுக்கும், வெளிப் படையில் நெருங்கிய சம்பந்தமில்லை என்பது உண்மையே. ஆனல், மெஞ்ஞானச் சூரியனுகிய நம் க்வாஜா சாஹிப் அவர்கள், சொன்ன உண்மையுணராமல், சத்தியத்தை அலக்ஷியம் செய்து, உதாசீனமாக நடந்து கொண்ட மன்னன் பிரித்வி ராஜனுக்கு, கொடுத்த எச்சரிக்கை என்னும் பத்—துஆ (சாபம்) எப்படி யெல்லாம் நிகழ்வுற்று, பலித மடைந்தது என்பதை விளக்குவதே இந்த அத்தியாயம்: விளக்கம்:—

### சம் யுக்தையின் சோரம்

பிரித்வி ராஜனுடைய சரித்திரத்தைப் பள்ளிக் கூடங்களில், பாடமாகப் படிக்கும் இளம் மாணவர்களின் மனதில் பதியும் ஒரே ஒரு விஷயம்: சம்யுக்தை என்னும் ராஜகுலப் பெண்ணை, கலியாண மண்டபத்தி லிருந்து பிரித்விராஜன் முரட்டுத்தனமாக நாசோரம் செய்து தூக்கிக் கொண்டு போய் விட்டான் என்ற உண்மை தான்.

இந்தக் காரணத்தை முன்னிட்டுத் தான், (சன்ஜோக்தா—சம் யுக்தை) பெண் உடைய தகப்பனுன வல்லரசன், 'ஜைசந்து' என்பான், தன் மகளைத் தூக்கிக் கொண்டு ஓடி விட்டதற்காகப், பிரித்வி மீது விரோதங் கொண்டு படையெடுத்துப் பல தாக்குதல் புரிந்து அழித்தொழித்தான் என்று கூறப்படுகிறது. காரணம் என்னவாகுலும், க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தியை அலக்ஷியம் செய்த பிரித்வி ராஜன் அழிந்தொழிந்தே போனுன் என்பது தான் நாம் இங்கு குறிப்பிட வேண்டிய முக்கிய விஷயம்.

இந்த சரித்திர வரலாற்றை இஸ்லாமிய சரித்திர ஆசிரியரான அக்பர் ஷாஹ்கான் சாஹிப் நஜீப் ஆபாதி அவர்கள், தமது

"ஆயீனயே ஹகீகத்நுமா" என்ற புத்தகத்தில் மிக மிக விரிவாக, ஆராய்ச்சித் திறனோடு எழுதி வைத்திருக்கிறார். அதை யெல்லாம் தமிழ்ப்படுத்தி எழுதினால் ஏடுகள் விரிந்து போய் விடும். எனவே சுருக்க வரலாறுகளை மட்டும் ஈங்கு எடுத்து எழுதுகிறேன்:—

## இந்து இதிகாசக் கதை

இந்து இதிகாசக் கதைகள் ஏராளமாக இருக்கின்றன. அவைகளில் ஒவ்வொன்றும் மிக விசித்திரமானதாய் இருக்கும். இவை புராணக் கதைகளை யொட்டியதாகவே இருக்கும். அவைகளில் சில:—

(1) ஒரு ராஜன் பதினான்கு லக்ஷம் ஆண்டு வாழ்ந்து ராஜ்யாதிகாரம் செலுத்திக் கொண்டிருந்தான்.

(2) ஒரு மகரிஷி (ஆண் புருஷன்) ஏதோ காரணத்தை முன்னிட்டு பெண்ணாக மாறி, 60–பிள்ளைகளைப் பெற்றெடுத்த பிறகு பழையபடி ஆணாக மாறி விட்டான்.

(3) ஒருவன், தன் உள்ளங்கையில், பல மைல் சதுர விஸ்தீரமுள்ள சஞ்சீவி மலையைத் தூக்கி வைத்துக் கொண்டு, ஆகாய மார்க்கத்தில் வெகு தூரம் பறந்து போய், அதை தன் எஜமானுக்குக் கொடுத்தான்.

(4) ஒரு ராஜனுக்கு இரண்டே கால்கள் மீது, (ஒரே வயிறு, ஒரே முதுகு, ஆனால்) பத்து தலைகளும் இருபது கைகளும் இருந்து, மகா பராக்கிரமசாலியாக ஆட்சி புரிந்து கொண்டிருந்தான்.

(5) ஒருவனுக்கு நான்கு முகங்கள் இருந்தன; ஆனால் இரண்டு கை, இரண்டு கால் தான்!

(6) ஒருவனுக்கு ஆறு முகங்களும் பன்னிரண்டு கைகளும் இருந்தன.

இது போன்ற கதைகள் இதிகாசங்களில் உண்டு. இதைப் போல் தான் ஜெய சந்து ராஜாவுடைய மகளான சம்யுக்தையின் அதிவிசித்திரமான சுயம்வரக் கதையை நாம் நம்ப வேண்டும்.

## ஏழு முறை படையெடுப்பு?

ஷஹாபுத்தீன் கோரி, ஒரு முறை இரண்டு முறையல்ல, ஏழு முறை, பிரித்விராஜன் மீது படையெடுத்து வந்து தாக்கினாராம். ஏழு முறையும் பிரித்விராஜனால் பிடிபட்டுத் தப்பித்து ஓடி விட்டாராம். இதுவும் மேற் கூறிய இதிகாசக் கதை போல் இருக்கிறதல்லவா?

இதில் இன்னொரு விசேஷம்: அதாவது, பிரித்விராஜன், ஜய சந்துடைய மகள் சம்யுக்தையை சுயம்வர மண்டபத்திலிருந்து தூக்கிக் கொண்டு போய், பலாத்காரமாக மனைவியாக்கிக் கொண்டானல்லவா? இங்ஙனம் தன் மகளைப் பறி கொடுத்த ராஜா ஜயசந்தன்,

பிரித்விராஜனை எதிர்க்க ஆற்ற மாட்டாமல், சுல்தான் ஷஹாபுத்தீன் கோரியிடம் வேண்டிக் கொண்டு அவரை, பிரித்விராஜன் மீது படையெடுத்துத் தாக்கச் செய்தாராம்.

இந்த வரலாற்றையும் இங்கே கொஞ்சம் விவரித்துச் சொல்கிறேன்:—

## சுயம்வரச் சம்பவத்துக்கு முன்

ஹிஜ்ரீ 587-ம் ஆண்டு. தாராதரி என்னும் ஊரில் சுல்தான் ஷஹாபுத்தீனின் முதல் தாக்குதல் (இந்தியா மீது படையெடுப்பு) நடை பெற்றது. அப்போது ராஜா ஜெயசந்தும், ராஜா பிரித்வி ராஜனும் ஒன்றாகவே சேர்ந்து, போர்க்களத்துக்கு வந்து, சுல்தானுடைய படைகளை எதிர்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது, ராஜகுமாரி சம்யுக்தைக்கு (ஸன்ஜோக்தாவுக்கு) புஷ்பவதியாகும் வயது வரவில்லை; எனவே, சுயம்வரமும் நடை பெற வில்லை. எனவே, பிரித்வி ராஜனுக்கும் ராஜா ஜெயசந்துக்கும் அப்போது எவ்வித விரோதமும் கிடையாது.

இரண்டாவது படையெடுப்பும் நடந்தது. இதில், ராஜா பிரித்விராஜன் தோல்வி யுற்று விட்டான் என்றும், சுல்தான் ஷஹாபுத்தீன் பிரித்வி ராஜனை சிறைப்படுத்திப் பாதுகாவலில் வைத்து தன்னுடன் கஜ்னி நாட்டுக்கு கொண்டு போய் விட்டான் என்றும் சொல்லப்படுகிறது.

அப்போது ஒரு நாள், சமயம் பார்த்திருந்து, பிரித்விராஜன், சுல்தான் ஷஹாபுத்தீனைக் கொல்வதற்காக, வாளால் தாக்கி விட்டு இறந்து விட்டதாக நினைத்து, தப்பித்து ஓடி வந்து விட்டான் என்றும் சொல்லப் படுகிறது.

## கலியாண ஏற்பாடு.

சுல்தான் ஷஹாபுத்தீன் வெட்டப்பட்டுத் தோல்வி யடைந்தார் என்று சொல்லப்பட்ட தல்லவா? அதன் பின் ராஜா ஜெயசந்தன், தன்னுடைய அருமை மகள் சம்யுக்தைக்கு கலியாண ஏற்பாடு செய்யலானான். அதாவது, சுயம்வரம் என்னும் மாப்பிள்ளை தேர்ந்தெடுக்கும் சடங்கிற்கு ஏற்பாடு செய்தான். எனவே, இந்த ஜெயசந்தன், பிரித்விராஜனைத் தன்னுடைய உறவினனாக எண்ணிக் கொண்டு, சுயம்வர மண்டபத்தில் வந்து வாசலை காவல் காக்கும்படி கேட்டுக் கொண்டானாம்

இதற்கு பிரித்விராஜன் இணங்க மறுத்து விட்டானாம். அது மட்டுமின்றி, ஜெயசந்தனைக் கேவலமாகப் பேசி, அவதூறு செய்தானாம்.

இதற்காக ஜெயசந்தனும் பிரித்வி ராஜனை அவமானப் படுத்தும் தோரணையில், தங்கத்தால் பிரித்வி ராஜனைப் போல் ஒரு சிலை செய்து, வாயல்படி காவல்காரன் காத்து நிற்பதைப் போல் நிற்க வைத்தானும்.

அப்போது, அஜ்மீரை ராஜா பிரித்விராஜ் ஆண்டு கொண்டிருந்தான் என்று கூறப்படுகிறது.

## பிரித்விராஜ் வீரம்

கன்னூஜை ஆளும் ஜயசந்தன், தன்னை அவமானப் படுத்தி தன்னைப் போல் சிலை செய்து வாசற் படியில் காவல் காரனாக வைத்திருக்கிறான் என்ற செய்தி பிரித்விராஜனுக்குத் தெரிய வந்தது. அவன் அவமானத்தை தாங்காமல், உக்ரோஷம் கொண்டு, பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்று மனதில் முடிவு செய்து கொண்டான். தக்க சமயம் பார்த்து, மாறு வேடத்தோடு பிரித்விராஜன், கன்னூஜுக்கு வந்து சேர்ந்தான்.

சுயம் வர மண்டபம் மகா அலங்காரமாக இருந்தது. பிரத்வி ராஜனைத் தவிர மற்ற சிற்றரசர்களெல்லோரும் சுயம் வரத்துக்கு வந்திருந்தனர். மாலையிட வேண்டிய முகூர்த்த வேளை நெருங்கியது.

## மண மாலையும் மங்கையும்

சம்யுக்தை, மணப் பெண்ணாக அலங்கரிக்கப்பட்டு, கையில் மண மாலையோடு ராஜாக்களின் கொலு மண்டபத்தில் வந்தாள். சுயம்வர முறைப்படி, அவள் யாராவது ஒரு ராஜாவுடைய கழுத்தில் அந்த மாலையைப் போட்டு, அவனைக் கணவனாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மணமகள் சம்யுக்தை, அரசக் கொலுவில் பார்த்தாள். பிரத்வி ராஜனைக் காண வில்லை. ஆனால் வாயல் அருகில் அவனுடைய அழகிய தங்க உருவச் சிலை இருந்தது. அதன் அருகில் வந்து, தங்கச் சிலைக்கு மாலையைப் போட்டு விட்டாள்.

இதை மாறு வேடத்தோடு, அங்கு நின்று கவனித்துக் கொண்டிருந்த பிரித்விராஜன், சரேலென்று பாய்ந்து, பூனைக் கிளியைத் தூக்குவது போல், அழகிய மங்கையான சம்யுக்தையை குதிரை மீது வைத்து தாக்கி அணைத்து உட்கார்ந்து கொண்டு. அதிவேகமாக செலுத்திக் கொண்டு ஓடியே போய் விட்டான். ஜய்சந்தினால் அவனைப் பிடிக்க முடிய வில்லை.

(தொடரும்)

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

18085

# நஸ்ஹுல் ஹதீது.
# வபத்ஹுல் மஜீது

புதிய மூன்றும் பதிப்பு

இவ்வுலகில் இன்ஸானாகப் பிறந்த ஒவ்வொருவரும், சிருஷ்டிக்கர்த்தாவாகிய அல்லாஹு தஆலாவை அறிந்து ஹகீகத்தை உணர்ந்து இபாதத்து செய்ய வேண்டியது அத்தியாவசியக் கடமை. இதற்கு இல்மு, ஒழுக்கம், ஈமான், இஸ்லாம், அமல், ஷரீஅத் முதலிய முஆமலாத்துகளைத் தெரிந்து கொள்ள வேண்டியது முதற்பெரும் கடமையாகும்.

இந்த அரிய பெரிய நூலாகிய "நஸ்ஹுல் ஹதீது வபத்ஹுல் மஜீது" என்பது நமது நபிகள் நாயகம் ரஹ்மத்துல்லில் ஆலமீன் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுகளென்னும் திருவாக்கியங்களைக் கொண்டும், ஸஹாபாக்கள், ஒலிமார்கள் ஸாலிஹீன்கள் நாதாக்களுடைய நஸீஹத்துகள் ஹிக்காயத்துகள் முதலிய உபதேச உபமேய ஆகமங்களை ஆதாரமாகக் கொண்டும், தீனுல் இஸ்லாத்தின் எல்லா மஸ்அலாக்களையும், விஷயங்களையும் தத்துவங்களையும் எடுத்தோதும் அற்புதமான நூலாகும். இந்த ஒரு கிதாபு மட்டும் கையில் யிருந்து விட்டால் தமிழ் முஸ்லிம்களுக்கு வேறெந்த கிதாபின் தேவையும் இராது. அதாவது இதில் இல்லாத விஷயமே இல்லை யென்று சொல்லலாம். இதன் அருமை நேரில் பார்த்தாலே தெரிய வரும்.

இதன் விலை ரூ. 9–60

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# மனயிஹுல் அன்வார் பீ
# மதாயிஹுர் றஸூல் வல்அப்றுர்.

## (அரபி)

இந்த கிதாபில் நமது நாட்டில் வழக்கமாய் ஓதி வருகிற ஸஹீஹான மௌலிது, மௌலிது பர்ஸஞ்சி, ஹஸன் (றலி) ஹுஸைன் (றலி) மௌலிது, முஹியத்தீன் (றலி) மௌலிது, ஷாஹுல் ஹமீது (றலி) மௌலிது ஆக ஐந்து மௌலிதுகளும், யாஸெய்யதி, யாகுத்பா, யாஸைய்யிதி ஷைகி, ஷபீஹுக பைத்து, கலாஸீ பைத்து, மழை பைத்து, பீஹுப்பி (ஸலவாத்து) பைத்து, கஸீதத்து ஹுஸைனிய்யா, அயாரப்பி பைத்து, ஜு(ஹ்)த்பிலுத்பிக முனாஜாத்து, ஜிந்தா ஷாஹ் நாரிய்யா பைத்து, அபுல் ஹஸனிஷ் ஷாதிலி (றஹ்) குத்பிய்யா, காஜா முயீனுத்தீன் (றலி) பர்திய்யா, யாமன்யரா பைத்து, கல்வத்து நாயகம் பேரில் கஸீதா முதலியவைகளும் அடங்கி யிருக்கின்றன. ஷை மௌலிதுகளுடைய பைத்துக ளெல்லாம் தடித்த கலத்தினால் பெரிய எழுத்தில் எழுதப்பட்டு போட்டோ பிளாக்கில் அச்சிடப் பட்டது. கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு செய்யப்பட்டது. இதன் விலை ரூ. 6-00

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.